*கவனிக்க.- 2018.10.05 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2093 - 2018 ඔක්තෝබර් මස 12 වැනි සිකුරාදා - 2018.10.12

*2093 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | 1746 |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 1747 |
| விஜலக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 1750 |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படுந் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகுந் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2018, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டு மென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*1745-B 81457-403 (2018/10)*

# அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

*2018 இன் இல. 811*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

இலங்கை பொறியியலாளர் சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. எம். எச். எம். இஸ்மயில் அவர்கள், 2018, யூலை மாதம் 02 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை கட்டடங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதியாக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

சுமித் அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

10- 289/1

---

*2018 இன் இல. 812*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திருமதி டபிள்யு. பீ. சந்தநாயக்க அவர்கள், 2018, ஓகத்து மாதம் 02 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை கடற்றொழில், நீரகவளமூல அபிவிருத்தி மற்றும் கிராமிய பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளராக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

சுமித் அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

10- 289/2

---

*2018 இன் இல. 813*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

இலங்கை நிருவா சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. டீ. எம்.எல். பண்டாரநாயக்க அவர்கள், 2018, ஓகத்து மாதம் 06 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை அம்பாறை நிருவாக மாவட்டத்தின் மாவட்டச் செயலாளராக/அரசாங்க அதிபராக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

சுமித் அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

10- 289/3

---

*2018 இன் இல. 814*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. எஸ். எஸ். என். டி. சில்வா அவர்கள், 2018, ஓகத்து மாதம் 06 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி இராஜாங்க அமைச்சின் செயலாளராக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

சுமித் அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

10- 289/4

---

*2018 இன் இல. 815*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திருமதி பி. பி. கே. அபேசிறி குணவர்தன அவர்கள், 2018, ஓகத்து மாதம் 08 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளராக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

சுமித் அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

10- 289/5

*2018 இன் இல. 816*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

*இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. யூ. ஜீ. ரஞ்சித் ஆரியரத்ன அவர்கள், 2018, ஒகத்து மாதம் 15 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை அஞ்சல்மா அதிபராக.*

*அமைச்சரவையின் கட்டளைப்படி,*

*சுமித் அபேசிங்க,*
*அமைச்சரவைச் செயலாளர்.*

*10- 289/6*

---

*2018 இன் இல. 817*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

*இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. பண்டுக சிறி பிரபாத் அபேவர்தன அவர்கள், 2018, ஒகத்து மாதம் 16 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை பொலன்நறுவை திருவாக மாவட்டத்தின் மாவட்டச் செயலாளராக/அரசாங்க அதிபராக.*

*அமைச்சரவையின் கட்டளைப்படி,*

*சுமித் அபேசிங்க,*
*அமைச்சரவைச் செயலாளர்.*

*10- 289/7*

*2018 இன் இல. 818*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

*இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திருமதி சி. விக்கிரமசிங்க அவர்கள், 2018, ஒகத்து மாதம் 16 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சின் செயலாளராக.*

*அமைச்சரவையின் கட்டளைப்படி,*

*சுமித் அபேசிங்க,*
*அமைச்சரவைச் செயலாளர்.*

*10- 289/8*

---

*2018 இன் இல. 819*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

*இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த (கலாநிதி) திரு. கே. ஏ. எஸ். கீரகல அவர்கள், 2018, செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை நகர நிதி இராஜாங்க அமைச்சின் செயலாளராக.*

*அமைச்சரவையின் கட்டளைப்படி,*

*சுமித் அபேசிங்க,*
*அமைச்சரவைச் செயலாளர்.*

*10- 289/9*

---

# *அரசாங்க அறிவித்தல்கள்*

### *1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, கடன் இணக்கக் கட்டளைச் சட்டம்*

*25 ஆம், 26 ஆம் பிரிவுகளின் கீழான அறிவித்தல்*

*1941 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தினாலும் 1959 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தினாலும் 1973 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தினாலும் 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டம் ஆகிய திருத்தச் சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ், பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கமொன்றின் எதிரே காட்டப்பட்டுள்ள கடனாளி கடன் கொடுத்தவர் என்னும் இரு தரப்பினருக்குமிடையே இணக்கமொன்றினை ஏற்படுத்தும் முயற்சியொன்றை மேற்கொள்ள கடன் இணக்கச் சபை எண்ணியுள்ளது.*

2. ஆதலால், சம்பந்தப்பட்ட கடன் கொடுத்தவர்கள், சபையின் முன் தோற்றுமாறு அவர்கள் தேவைப்படுத்தப்பட்ட திகதிக்கு முன்னர் கீழ்க் கண்ட கடனாளிகளிடமிருந்து தங்களுக்கு வருமதியாகவுள்ள கடன்களின் விவரங்களை சபைக்கு கொடுத்துதவுமாறு மேற்படி கட்டளைச் சட்டத்தின் 25(1), 26(1) ஆகிய பிரிவுகளினது நியதிகளின்படி இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

றோஷனீ ஹெட்டிகே,
செயலாளர் (பதில்),
கடன் இணக்கச் சபைத் திணைக்களம்.

கடன் இணக்கச் சபைத் திணைக்களம்,
இல. 35ஏ, கலாநிதி என். எம். பெரேரா மாவத்தை,
கொழும்பு 08,
2018, செத்தெம்பர் 27.

**அட்டவணை**

| விண்ணப்ப இல. | கடனாளியின் பெயரும் முகவரியும் | கடன் கொடுத்தவரின் பெயரும் முகவரியும் | எடுத்த திகதி |
|---|---|---|---|
| (01) 42887 | திருமதி வித்தானகே மாலனீ பெரேரா, இல. 350, தெகிவளை வீதி, பொரலெஸ்கமுவ. | திரு. உபுல் சந்திரசிறி கமகே, இல. 35/2, தெகிவளை வீதி, பொரலெஸ்கமுவ. | 2018.11.28 |
| (02) 44796 | திருமதி கிறிகினகே விமல் காந்தி, பொல்பிட்டியவத்த, கந்தர. | திருமதி கலப்பத்தி ஆரச்சிகே தமரா தமயந்தி, இல. 155/23, இம்புல்கொட, கம்பஹா. | 2018.11.08 |
| (03) 42673 | திரு. கோனபீனுபல தமிந்த ருவன் குமார, “சிறிவிலா”, கனேகொட, ரத்கம,<br>அற்றோணித் தத்துவக்காரர், திருமதி தேமுனி விமலா, “சிறிவிலா”, கனேகொட, ரத்கம. | திரு. தெடிமுனி ஜகத் பிரியலால் த  சில்வா, மெதகொட வத்த, ரத்கொட. | 2018.11.08 |
| (04) 42477 | திரு. எல்லாவலகே பிரியந்த குமாரசிறி, இல. 291/3, சுவர்ணானந்த நிவாச, மாம்பே வடக்கு, பிலியந்தலை. | திரு. சந்திம பிரபாத் உக்வத்த, இல. 360, உடஹமுல்ல நுகேகொடை, மேர்ச்சன்ட் கிரடிட் ஒவ் ஶ்ரீ லங்கா லிமிட்டெட், 11 ஆம் மாடி, சென்ட் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03. | 2018.11.02 |
| (05) 44802 | திருமதி தெகம்பட அப்புஹாமிலாகே தோன சியாமலீ பிரேமதிலக, இல. 395சீ, தூரியன்கஸ் ஹந்திய, கட்டானை.<br>திரு. தெகம்பட அப்புஹாமிலாகே தொன் பிரேமபால, தூரியன்கஸ் ஹந்திய, கட்டானை. | திரு. ஜயமான்ன மொஹொட்டிகே தொன் தினேஷ் மதுசங்க, இல. 17/20, தாகொன்ன,  நீர்கொழும்பு. | 2018.11.07 |

| விண்ணப்ப இல. | கடனாளியின் பெயரும் முகவரியும் | கடன் கொடுத்தவரின் பெயரும் முகவரியும் | எடுத்த திகதி |
|---|---|---|---|
| (06) 44755 | திரு. சமரசிங்க ஆரச்சிகே தொன் தர்ஷன மகேஷ் சமரசிங்க, இல. 49, தீபங்கொட, ஹோமாகம. | திரு. ஜயவீரகே கோஷல உதயசாந்த, இல. 169/2B, பிராஹ்ம்மனகம, பன்னிப்பிட்டிய. | 2018.09.26 |
| | திருமதி புங்கிகே நாலனீ பத்மா பெரேரா, இல. 49, தீபங்கொட, ஹோமாகம. | | |
| (07) 44316 | திருமதி மாலகம்மன கெதர, அமீனா குமாரி விக்கிரமதிலக, இல. 100/3, வராதென்ன, அரம்பேகம, பிலிமதலாவ. | திரு. ஹேரத் முதியன்சேலாகே சம்பத் பிரியதர்ஷன பண்டார, இல. 40, ஜீ. அலபலாவல, ஹந்தெஸ்ஸ. | 2018.11.26 |
| (08) 44777 | திருமதி ஹேவாதந்திரிகே ரத்னசீலி பீரிஸ், இல. 613, பலுகவெல, கட்டுவெல்லகம. | திருமதி களுபஹன வடுகே ஜசிந்தா, இல. 176, 3 ஆம் குறணை, நீர்கொழும்பு. | 2018.11.19 |
| (09) 44681 | திரு. அருள்பிரகாசம் ஜெயேந்திரன், "குகஸ்தான்", கொக்குவில் மேற்கு, யாழ்ப்பாணம். | திரு. சரணவமுத்து சுப்பிரமணியம் தங்கராசா, "மருதமகல்", இணுவில் வீதி, மானிப்பாய். | 2018.12.10 |
| (10) 44749 | திருமதி அருமா ஹென்னதிகே சந்திராணி, இல. 52/C/25, மைத்திரி இடம், சூரியபாலுவ, கடவத்தை. | திருமதி கஹதுகொட கங்கானமகே ரஷிகா நிரோஷணீ, இல. 46/B/5, சுவர்ண இடம், சூரியபாலுவ, கடவத்தை. | 2018.11.13 |
| | திரு. ஹேவா ஜயலத்கே சமித் சமீர, 52C, 25, மைத்திரி இடம், சூரியபாலுவ, கடவத்தை | கொமர்ஷல் கிரடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சீ, இல. 106, யட்டிநுவர வீதி, கண்டி. | |

10-389

---

## கல்வி அமைச்சு

### ஆசிரியர் மத்திய நிலைய பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்

1977 ஆம் ஆண்டு தேசிய ஆசிரியர் சேவை அதிகார சபைச் சட்டம் 32 இன் படி நாடுபூராகவும் அமைந்துள்ள "ஆசிரியர் மத்திய நிலையங்கள்" ஆசிரியர் தொழில்சார் அபிவிருத்தியினை மேலும் அர்த்தமுள்ளதாக்கும் வகையில் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் "**ஆசிரியர் தொழில்சார் அபிவிருத்தி மத்திய நிலையம்**" என பெயர் மாற்றப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சுனில் ஹெட்டிஆரச்சி,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

இசுருபாய, பத்தரமுல்லை.
2018, செத்தெம்பர் 14.

10-446

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ - இரத்தினபுரி கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

வாடிக்கையாளரின் பெயர் : அத்துரலியகமகே ஜகத் சந்திர கீர்த்தி அத்துரலியகம

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

"அத்துரலியகமகே ஜகத் சந்திர கீர்த்தி அத்துரலியகம கடப்பாடு உடையவராகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ சார்பில் இரத்தினபுரி பிரசித்த நொத்தாரிசு கே. எஸ். அபயரட்னவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.12.12 ஆந் திகதி இடப்பட்ட 4757, இரத்தினபுரி பிரசித்த நொத்தாரிசு கே. எஸ். அபயரட்னவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2009.08.20 ஆந் திகதி இடப்பட்ட 5309, இரத்தினபுரி பிரசித்த நொத்தாரிசு டி. ராஜபக்சவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011.08.16 ஆந் திகதி இடப்பட்ட 1670, இரத்தினபுரி பிரசித்த நொத்தாரிசு டி. ராஜபக்சவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011.12.19 ஆந் திகதி இடப்பட்ட 1861, இரத்தினபுரி பிரசித்த நொத்தாரிசு டி. ராஜபக்சவினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2012.09.27 ஆந் திகதி இடப்பட்ட 2204, மற்றும் இரத்தினபுரி பிரசித்த நொத்தாரிசு டி. ராஜபக்சவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013.11.26 ஆந் திகதி இடப்பட்ட 2678 ஆகிய இலக்க முறிகள், மேலதிகமாக அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி மற்றும் கட்டடம், அத்துடன் இரண்டாவது அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ள இயந்திராதி மீதான வருமதியான கொடுப்பனவில் அத்துரலியகமகே ஜகத் சந்திரா கீர்த்தி அத்துரலியகமவிற்கு ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ இனால் வழங்கப்பட்ட கடன் கொடுப்பனவிற்கான பாதுகாப்பாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ இனால் வழங்கப்பட்ட கடன் தொடர்பாக தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2018, மே 17 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மூலம் ரூபா 57,26,633.89 (ஐம்பத்து ஏழு இலட்சத்து இருபத்து ஆறாயிரத்து அறுநூற்று முப்பத்து மூன்று ரூபா எண்பத்து ஒன்பது தசம்) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள சொல் லப்பட்ட 4757, 5309, 1670, 1861, 2204 மற்றும் 2678 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனம் சொல்லப்பட்ட ரூபா 57,26,633.89 பணத்தொகையை 2018, மே 17 திகதியில் இருந்து விற்பனை நாள் வரை மேலும் 2018, மே 18 முதல் மேலும் வட்டியுடனும், விளம்பர செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் எல். பி. சேனநாயக்காவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.".

### அட்டவணை

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள குறுவிற்றி கோறளவின் உட பற்று தெற்கில் உள்ள இரத்தினபுரி மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட வெரலுப்பே கிராமத்தில் உள்ள லென்தெடிய வீதியில் உள்ள "லென்தெடிய ஹேன கெபல்ல" என அழைக்கப்படுவதும் தெரியப்படுவதுமான காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் கே. நந்தசேனவினால் தயாரிக்கப்பட்ட 1992.04.24 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 330 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட சொல்லப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : வீதி; கிழக்கு: அதே காணியின் மிகுதியான பகுதி ; தெற்கு : அதே காணியின் மிகுதியான பகுதி ; மேற்கு : லெந்தெடிய கும்புர மற்றும் பதினைந்து தசம் எட்டு பேர்ச் (0றூ. 0றூ. 15.8பே.) விஸ்தீரணத்தைக் கொண்டதுடன், இரத்தினபுரி மாவட்ட காணிபதிவகத்தில் K35/ 96 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) கே. ஏ. எல். ரீ. ரணவீர,
பி.பொ.மு.( சட்டம்) /சபைச் செயலாளர்.

10-404/4

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ - மருதானைக் கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

வாடிக்கையாளரின் பெயர் : மொகமட் அல்வன் மொகமட்அசாம் போச்சூன் ட்ரேடிங் கொம்பனியின் ஏக உரிமையாளர்

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி

நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

“மொகமட் அல்வன் மொகமட் அசாம் போச்சூன் ட்ரேடிங் கொம்பனியின் ஏக உரிமையாளர், கடப்பாடு உடையவராக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ சார்பில், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கே. ஜி. என். எஸ். சில்வாவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.10.23 ஆந் திகதி இடப்பட்ட 769 ஆம் இலக்க முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2018, யூலை 01 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ தபானத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது ஒரு கோடியே நாற்பத்து எட்டு இலட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து நூற்றித் தொண்ணூற்றேழு ரூபா எண்பது சதம் (ரூபா 1,48,47,197.80) கொண்ட பணத்தொகை ஒன்று, தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல். சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட 769 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 1,48,47,197.80 பணத்தொகையை 2018, யூலை 02 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை மேலும் வட்டியுடனும், விளம்பர செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக தீவு முழுவதற்குமான உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் டலஸ் கெலாட்டினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.”.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் உள்ள சல்பிற்றி கோறளவின் பள்ளே பற்றுவில் உள்ள தெஹிவல - கல்கிசை மாநகர சபையின் எல்லைக்கு உட்பட்ட தெஹிவலை பிரதேச செயலாளர் பிரவு மற்றும் களுபோவில் கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட ஹத்போதிவத்த பிரிவு இலக்கம் 5 இல் உள்ள களுபோவில மேற்கில் உள்ள ஸ்கூல் அவன்யூவின் வரிமதிப்பீட்டிலக்கம் 15 ஐக் கொண்டுள்ள மடன்கஹாவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நில அளவையாளர் ஜி. பி. நாணயகாரவினால் தயாரிக்கப்பட்ட 1991, மே 18 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 9225A இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 01 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : ஸ்கூல் அவென்யூ; கிழக்கு : ஸ்கூல் அவென்யூ ; தெற்கு : அரச காணி ; மேற்கு : வரைபட இலக்கம் 2281 இல் உள்ள காணித்துண்டு A அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 9225A இற்கு அமைவான ஒன்பத தசம் ஏழு ஏழு பேர்ச் (0றூ. 0றூ. 9.77பே.) விஸ்தீரணமானது, தெல்கந்த - நுகேகொட காணிபதிவகத்தில் F 153/02 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

முன்சொல்லப்பட்ட பகிரப்பட்ட காணி அண்மையில் நில அளவை செய்யப்பட்டதுடன், உரிமம் பெற்ற நில அளவையாளர் ஜி. பி. தொடன்வெலவினால் தயாரிக்கப்பட்ட 2006, பெப்புருவரி 2 திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 5923 இல் காட்டப்பட்டுள்ளதன் விபரங்கள் பின்வருமாறு:

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் உள்ள சல்பிற்றி கோறளவின் பள்ளே பற்றுவில் உள்ள தெஹிவல - கல்கிசை மாநகர சபையின் எல்லைக்கு உட்பட்ட தெஹிவலை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் களுபோவில கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட ஹத்போதிவத்த பிரிவு இலக்கம் 5 இல் உள்ள களுபோவில மேற்கில் உள்ள ஸ்கூல் அவன்யூவின் வரிமதிப்பீட்டிலக்கம் 15 ஐக் கொண்டுள்ள மடன்கஹாவத்த என அழைக்கப்படும் காணியுடனான காணித்துண்டு A என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியுடனான கட்டடங்கள் என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : ஸ்கூல் அவென்யூ; கிழக்கு : ஸ்கூல் அவென்யூ ; தெற்கு : ஸ்கூல் அவென்யூ அத்துடன் ஸ்கூல் அவென்யூவின் வரிமதிப்பீட்டிலக்கம் 11/21 ஐக் கொண்டுள்ள வளவுகள் ; மேற்கு : ஸ்கூல் அவென்யூவின் வரிமதிப்பீட்டிலக்கம் 15B ஐக் கொண்டுள்ள வளவுகள் அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 5923 இற்கு அமைவான ஒன்பது தசம் ஏழு ஏழு பேர்ச் (0றூ. 0றூ. 9.77) விஸ்தீரணத்தைக் கொண்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே.ஏ.எல்.ரீ.ரணவீர,
பி.பொ.மு.( சட்டம்) /சபைச் செயலாளர்.

10-404/3

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ - பொலநறுவைக் கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

வாடிக்கையாளரின் பெயர் : மொகமட் கன்னி மொகமட் ரிஸ்பால் மற்றும் மொகமட் லெப்பே டுல்கராநெயின்

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி

நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

"மொகமட் கன்னி மொகமட் ரிஸ்பால் மற்றும் மொகமட் லெப்பே டுல்கராநெயின் கடப்பாடு உடையவர்களாகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ சார்பில், பொலநறுவை பிரசித்த நொத்தாரிசு பி.ஏ.பீ.எஸ். ஹரிச்சந்திரவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007.02.08 ஆந் திகதி இடப்பட்ட 2515 மற்றும் 2008.12.16 ஆந் திகதியிடப்பட்ட 2792 மற்றும் பொலநறுவை பிரசித்த நொத்தாரிசு ஆர். விரசேகரவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013.06.19 ஆந் திகதியிடப்பட்ட 460, 2016.05.11 ஆந் திகதியிடப்பட்ட 684 மற்றும் 2017.04.26 ஆந் திகதியிடப்பட்ட 753 ஆகிய இலக்கம் முறிகள் மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியள்ளார்கள் ஆதலாலும், 2018, மாச்சு 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மூலம் ஐம்பது மூன்று இலட்சத்து பதின் மூன்றாயிரத்து இருநூற்று பத்து ரூபா முப்பத்து இரண்டு சதம் (ரூபா 53,13,210.32) கொண்ட பணத்தொகை ஒன்று சொல்லப்பட்ட ஏனைய கடன் வசதிகளுடன் அபிவிருத்திக் கடன் உங்களுக்கு வழங்கப்பட்டது தொடர்பாக, தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட 2515, 2792, 460, 684 மற்றும் 753 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ தபானத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 53,13,210.32 பணத்தொகையை 2018, ஏப்பிறல் 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை மேலும் வட்டியுடனும், விளம்பர செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஐ. டப்ளியு. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.".

### அட்டவணை

வடமத்திய மாகாணத்தில் உள்ள பொலநறுவை மாவட்டத்தில் உள்ள தம்மன்கடுவ பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மெதுபற்றுவின் தம்மன்கடுவ பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட கதுருவெல 74-A கிராம அலுவலர் பிரிவு (தற்போது 186- கதுருவெல கிழக்கு கிராம அலுவலர் பிரிவு) கதுருவெல என அழைக்கப்படும் கிராமத்தில் உள்ள, நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் FCP Po 151 இல் உள்ள காணித்துண்டு இலக்கம் 43 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் கே. கன்னன்கரவினால் 1999, ஏப்பிறல் 28 அன்று மீள நில அளவை செய்யப்பட்டு வரைபட இலக்கம் 1999/ 80 தயாரிக்கப்பட்டது, அத்துடன் சொல்லப்பட்ட வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இலக்கம் 05 இன் எல்லைகள் - வடக்கு : மேற்குறிப்பிடப்பட்ட சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 1999/80 இன் காணித்துண்டு இலக்கம் 04; கிழக்கு : மேற் குறிப்பிடப்பட்ட சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 1999/80 இன் காணித்துண்டு இலக்கம் 04 ; தெற்கு : வரைபட இல. FCP Po 151 இன் காணித்துண்டு இலக்கம் 42 ; மேற்கு : வரைபடம் FCP Po 151 இன் காணித்துண்டு இலக்கம் 42 இன் இரண்டு றூட் மற்றும் முப்பத்து இரண்டு பேர்ச் (0றூ. 2றூ. 32பே.) விஸ்தீரணமானது, உரிமம் பெற்ற நில அளவையாளர் ரி. பி. எஸ். சங்கரன்தெனியவினால் தயாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் 3262 இன் ஒரே எல்லைகள் மற்றும் விஸ்தீரணங்கள், கட்டடங்கள், பயிர்செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே.ஏ.எல்.ரீ.ரணவீர,
பி.பொ.மு.( சட்டம்) /சபைச் செயலாளர்.

10-404/9

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ - களுத்துறைக் கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

வாடிக்கையாளரின் பெயர் : இலங்ககே சுதேஷ் கிருஷாந்த பெரேரா

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

"இலங்ககே சுதேஷ் கிருஷாந்த பெரேரா கடப்பாடு உடையவராகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ சார்பில், முன்சொல்லப்பட்ட 4648, 4738, 1364 மற்றும் 1534 இலக்க முறிகள் மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2018, மே 30 திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மூலம் ஐம்பத்தேழு இலட்சத்து ஐம்பத்து ஆறாயிரத்து முந்நூறு ரூபா அறுபத்து ஐந்து சதம் (ரூபா 57,56,300.65) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல். சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட 4648, 4738, 1364 மற்றும் 1534 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட (ரூபா 57,56,300.65) பணத்தொகையை

2018, மே 31 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை மேலும் வட்டியுடனும், விளம்பர செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக உரிமம் பெற்ற ஏல விற்பணையாளர் ஈ. எஸ். ராமநாயக்காவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.".

**அட்டவணை**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் உள்ள களுத்துறை தொட்டமுன வடக்கின் களுத்துறை பட்டவில் உள்ள தொடன்கொட பிரதேச சபை எல்லை மற்றும் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 719B கிராம அலுவலர் பிரிவில் உள்ள கொஹொலனவில் உள்ள உஸ்கஹாவத்த மறுபெயர் கன்கனன்கேவத்த A, B, C மற்றும் D ஆகிய காணித்துண்டுகள் இணைக்கப்பட்ட காணியுடனான மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாம் மீள நில அளவை செய்யப் பட்டது, உரிமம் பெற்ற நில அளவையாளர் எம். வி. ரி. பீ. ஜயசுந்தரவினால் தயாரிக்கப்பட்ட 2011, ஏப்பிறல் 19 திகதியிடப் பட்ட வரைபட இலக்கம் 11/62 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு X என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : பெலவத்த மற்றும் களு கங்கை; கிழக்கு: அதே காணியின் காணித்துண்டு 1 ; தெற்கு: அதே காணியின் காணித்துண்டு 1, அதே காணியின் (வீதி) காணித்துண்டு 7 இன் பகுதி மற்றும் அதே காணியின் (12 அடி அகலமான வீதி) காணித்துண்டு E ; மேற்கு: அதே காணியின் (12 அடி அகலமான வீதி) காணித்துண்டு E மற்றும் பெலவத்த, அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 11/ 62 இற்கு அமைவான ஒரு றூட் மற்றும் பதினாறு தசம் ஆறு பேர்ச் (0றூ. 1றூ. 16.6பே.) அல்லது பூஜ்யம் தசம் ஒன்று நான்கு மூன்று ஒன்று ஹெக்டயர் (0.1431 ஹெக்.) விஸ்தீரணத்தைக் கொண்டது, மத்தும காணிபதிவகத்தில் தொகுதி/ பக்கம் B59/ 105 இன் கீழ் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே.ஏ.எல்.ரீ.ரணவீர,
பி.பொ.மு.( சட்டம்) /சபைச் செயலாளர்.

10-404/1

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ– களுத்துறைக் கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

வாடிக்கையாளரின் பெயர் : இலங்ககே சுதேஷ கிருஷாந்த பெரேரா மற்றும் ஜூதிக ஹெல்மாலி கலகம விக்கிரமகே

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

"இலங்ககே சுதேஷ கிருஷாந்த பெரேரா மற்றும் ஜூதிக ஹெல்மாலி கலகம விக்கிரமகே கடப்பாடு உடையவர் களாகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ சார்பில், பாணந்துறை பிரசித்த நொத்தாரிசு பீ. வி. என். டப்ளியூ. பெரேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2010.04.22 ஆந் திகதியிடப்பட்ட 3026, 2011.07.05 ஆந் திகதியிடப்பட்ட 3510 ஆகிய இரு முறிகள் மற்றும் களுத்துறை பிரசித்த நொத்தாரிசு வை. என். பீ. டீ. சில்வாவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013.07.05 ஆந் திகதியிடப்பட்ட 825, 2013.12.16 ஆந் திகதியிடப்பட்ட 957, 2014.01.23 ஆந் திகதியிடப்பட்ட 980 மற்றும் 2017.11.30 ஆந் திகதியிடப்பட்ட 2161 ஆகிய இலக்க முறிகள் மீதான வருமதியான கொடுப்பனவுகளில் தவணை தவறியுள்ளார்கள் ஆதலாலும், 2018, மே 30 ஆந் திகதியின்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மூலம் ஒரு கோடியே ஐந்து இலட்சத்து முப்பத்து ஒன்பதாயிரத்து அறுநூற்று இருபத்து ஏழு ரூபா எழுபத்து ஒரு சதம் (ரூபா 1,05,39,627.71) கொண்ட பணத்தொகை ஒன்று ஏனைய கடன் வசதிகளுடன், நிரந்தர மேலதிக கடன் மற்றும் அபிவிருத்தி கடன் வசதி வாய்ப்புகள் வழங்கப்பட்டது தொடர்பாக தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான முதலாவது மற்றும் இரண்டாவது அட்டவணைகளில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட 3026, 3510, 825, 957, 980 மற்றும் 2161 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ தாபனத்திற்கு ஈடுவைக்கப் பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட (ரூபா 1,05,39,627.71) பணத்தொகையை 2018, மே 31 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை மேலும் வட்டியுடனும், விளம்பர செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவீடு செய்ய இத்தால் தீர்மானிக்கின்றது.

இலங்ககே சுதேஷ கிருஷாந்த பெரேரா கடப்பாடு உடையவராகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல். சீ சார்பில், பாணந்துறை பிரசித்த நொத்தாரிசு பீ.வி. என். டப்ளியூ. பெரேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.09.24 ஆந் திகதியிடப்பட்ட 4648 மற்றும் 2014.12.22 ஆந் திகதியிடப்பட்ட 4738 ஆகிய இலக்க முறிகள் மற்றும் களுத்துறை பிரசித்த நொத்தாரிசு வை. என். பீ. டீ. சில்வாவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.07.30 ஆந் திகதியிடப்பட்ட 1364 மற்றும் 2016.12.09 ஆந் திகதியிடப்பட்ட 1534 ஆகிய இலக்க முறிகள் மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2018, மே 30 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பி.எல்.சீ. தாபனத்திற்கு சொல்லப்

பட்ட முறிகள் மூலம் ஐம்பத்து ஏழு இலட்சத்து ஐம்பத்து ஆறாயிரத்து முந்நூற்று ரூபா அறுபத்து ஐந்து சதம் (ரூபா 57,56,300.65) கொண்ட பணத்தொகை ஒன்று ஏனைய கடன் வசதிகளுடன், அபிவிருத்தி கடன் வசதி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டது தொடர்பாக தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான இரண்டாவது அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட 4648, 4738, 1364 மற்றும் 1534 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான சொல்லப்பட்ட (ரூபா 57,56,300.65) பணத்தொகையை 2018, மே 31 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை மேலும் வட்டியுடனும், விளம்பர செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவீடு செய்ய இத்தால் தீர்மானிக்கின்றது.

அத்துடன், முன் சொல்லப்பட்ட 3026, 3510, 825, 957, 980, 4648, 4738, 1364, 1534, 4648, 4738, 1364 மற்றும் 1534 ஆம் இலக்க முறிகளுக்கு அமைய முன்சொல்லப்பட்ட (ரூபா 1,62,95,928.36) தொகையினை அறவிடுவதற்காக தீவு முழுவதற்குமான உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஈ. எஸ். ராமநாயக்காவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.”.

### முதலாம் அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாட்டத்தில் உள்ள களுத்துறை தொட்டமுன வடக்கின் களுத்துறை பத்தவில் உள்ள களுத்துறை பிரதேச செயலகத்தில் உள்ள களுத்துறை பிரதேச சபையின் வஸ்கடுவ உப காரியாலய எல்லைக்கு உட்பட்ட 718 எத்தனமடல கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட ஜாவத்தையில் உள்ள மொரகஹாகந்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள், மரங்கள், பயிர் செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாம் உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். கே. மஹிந்தவினால் தயாரிக்கப்பட்ட 2006, ஓகத்து 24 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 2856 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு A என அடையாளம் இடப்பட்ட, பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட சொல்லப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 1749 இல் உள்ள காணித்துண்டுகள் 124 மற்றும் 121; கிழக்கு : சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 1749 இல் உள்ள காணித்துண்டுகள் 121 மற்றும் 264 ; தெற்கு : செய்யப்பட்ட வரைபட இலக்கம் 1749 இல் உள்ள காணித்துண்டுகள் 264 மற்றும் 263 ; மேற்கு : சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 1749 இல் உள்ள காணித்துண்டுகள் 263, அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 2856 இற்கு அமைவான இருபத்து இரண்டு தசம் ஒன்பது பூச்சியம் பேர்ச் (0றூ. 0றூ. 22.90பே.) விஸ்தீரணத்தைக் கொண்டது, களுத்துறை காணிப் பதிவகத்தில் C 30/50 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

### இரண்டாவது அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் உள்ள களுத்துறை தொட்டமுன வடக்கின் களுத்துறை பத்துவில் உள்ள தொடன்கொட பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட 719B கொஹொலன் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள உஸ்கஹாவத்த மறுபெயர் கன்கனகேவத்தவின் இணைக்கப்பட்ட காணித்துண்டுக்கள் A, B, C மற்றும் D என்பன, உரிமம் பெற்ற நில அளவையாளர் எம். வி. ரி. பீ. ஜயசுந்தரவினால் தயாரிக்கப்பட்ட 2011, ஏப்பிறல் 19 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 11/62 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு X என அடையாளம் இடப்பட்ட, பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட சொல்லப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு: பெலவத்த மற்றும் களு கங்கை; கிழக்கு : அதே காணியின் காணித்துண்டு 1 ; தெற்கு : அதே காணியின் காணித்துண்டு 1, அதே காணியின் காணித்துண்டு 7 இன் பகுதி மற்றும் அதே காணியின் காணித்துண்டு E (12 அடி அகலமான வீதி) மற்றும் பெலவத்த மற்றும் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 11/ 62 இற்கு அமைவான ஒரு றூட் மற்றும் பதினாறு தசம் ஆறு பேர்ச் (0றூ. 1றூ. 61.6பே.) அல்லது பூஜ்யம் தசம் ஒன்று நான்கு மூன்று ஒன்று ஹெக்டயர் (0.1431 ஹெக்) விஹ்தீரணமானது, மத்துகம காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் B 59/105 இன் கீழ் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே.ஏ.எல்.ரீ.ரணவீர,
பி.பொ.மு.( சட்டம்) /சபைச் செயலாளர்.

10-404/13

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ - ஹெட்டிபொல கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

வாடிக்கையாளரின் பெயர் : மாப்பா முதியன்சலாகே தயாவதி

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

“மாப்பா முதியான்சலாகே தயாவதி கடப்பாடு உடையவர்களாகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல். சீ. சார்பில், குருநாகல் பிரசித்த நொத்தாரிசு ரி. ஆர். பீ. கலகேயினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.02.25 ஆந் திகதியிடப்பட்ட 2362, 2014.10.17 ஆந் திகதியிடப்பட்ட 2654, 2015.08.25 ஆந் திகதியிடப்பட்ட 2941, 2017.06.15

திகதியிடப்பட்ட 3594 மற்றும் 2017.12.11 ஆந் திகதியிடப்பட்ட 3792 ஆகிய இலக்க முறிகள் மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2018, யுன் 30 திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மூலம் அறுபது இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரத்து தொளாயிரத்து எழுபத்து மூன்று ரூபா ஆறு சதம் (ரூபா 60,95,973.06) கொண்ட பணத்தொகை ஒன்று சொல்லப்பட்ட ஏனைய கடன் வசதிகளுடன் நிரந்தர மேலதிக கடன் வசதி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டது தொடர்பாக, தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட 2362, 2654, 2941, 3594 மற்றும் 3792 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 60,95,973.06 பணத்தொகையை 2018, யூலை 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை மேலும் வட்டியுடனும், விளம்பர செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக தீவு முழுவதற்குமான உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் பீ. முத்துக்குமாரணவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.".

**அட்டவணை**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் உள்ள தேவமெதி ஹத்பற்றுவின் கிரத்தாலன கோறளையில் உள்ள பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பண்டுவஸ்நுவர பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட ஹெட்டிபொல கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட ஹெட்டிபொல கிராமத்தில் உள்ள "கப்புஹேன வத்த" என அழைக்கப்படும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். டபிள்யூ. நந்தசேனவினால் தயாரிக்கப்பட்ட 2007.02.22 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 2526 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 01 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு: சிலாபத்தில் இருந்து வாரியப்பொல செல்லும் வீதி (வீ. அ. அ. ச); கிழக்கு: பண்டுவஸ்நுவர கூட்டுறவு சங்கத்தினால் உரிமை கோரப்படும் காணி; தெற்கு: பண்டுவஸ்நுவர பேரூந்து நிலையம்; மேற்கு: பண்டுவஸ்நுவர கூட்டுறவுச் சங்கத்தினால் உரிமை கோரப்படும் காணி. அத்துடன், எட்டு தசம் ஆறு பேர்ச் (0றூ. 0றூ. 8.6பே.) விஸ்தீரணத்துடனான மரங்கள், பயிர்செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாம்.

வரைபட இலக்கம் 2526 இல் உள்ள மேலே விபரிக்கப்பட்ட அந்த சொல்லப்பட்ட காணித்துண்டு 01 மீள நில அளவை செய்யப்பட்ட காணி மேலதிகமாக பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது,

முன்சொல்லப்பட்ட ஹெட்டிபொல கிராமத்தில் உள்ள "கப்புஹேன வத்த" என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் பி. ஏ. எஸ். பிகராடோவினால் தயாரிக்கப்பட்ட 1968.07.14 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 1195 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 06 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட சொல்லப்பட்ட காணியின் எல்லைகள்- வடக்கு: சிலாபத்தில் இருந்து குருநாகல் செல்லும் வீதி; கிழக்கு: முன்சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 1195 இல் உள்ள காணித்துண்டு 05; தெற்கு: விஜயகோனினால் உரிமை கோரப்படும் காணி; மேற்கு: முன்சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 1195 இல் உள்ள காணித்துண்டு 07. அத்துடன், ஒன்பது தசம் ஒன்று எட்டு பேர்ச் (0றூ. 0றூ. 9.18பே.) விஸ்தீரணத்துடனான மரங்கள், பயிர்செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே.ஏ.எல்.ரீ.ரணவீர,
பி.பொ.மு.( சட்டம்) /சபைச் செயலாளர்.

10-404/2

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ - நகர அலுவலகக் கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

மக்வூட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

"மக்வூட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் கடப்பாடு உடையவர் களாகவும், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். எஸ். ஹலோலுவவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2009, மாச்சு 30 ஆந் திகதியிடப்பட்ட 2413 ஆம் இலக்க அடகு முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளது, என்பதுடன் காணி மற்றும் கட்டடங்கள், இத்துடனான அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ளதுடன், மக்வூட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்டிற்கு வழங்கப்பட்ட தவணை கடன் வசதி கொடுப்பனவுகள் தொடர்பாக பாதுகாப்பிற்காக வழங்கப்பட்ட கொடுப்பனவான ரூபா 3,79,65,209.97 (மூன்று கோடியே எழுபத்தொன்பது

இலட்சத்து அறுபத்தையாயிரத்து இருநூற்று ஒன்பது ரூபா தொண்ணூற்று ஏழு சதம்) 2018, சனவரி 19 ஆந் திகதி வரையிலானது,

அத்துடன், மக்வூட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் கடப்பாடு உடையதாகவும், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். எஸ். ஹலோலுவவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2009, மாச்சு 30 ஆந் திகதியிடப்பட்ட 2413 ஆம் இலக்க அடகு முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவறியுள்ளது, என்பதுடன் காணி மற்றும் கட்டடங்கள், இத்துடனான அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்படுள்ளதுடன், மக்வூட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்டிற்கு வழங்கப்பட்ட தவணை கடன் வசதி கொடுப்பனவுகள் தொடர்பாக பாதுகாப்பிற்காக வழங்கப்பட்ட கொடுப்பனவான ரூபா 3,35,81,420.88 (மூன்று கோடியே முப்பத்து ஐந்து இலட்சத்து எண்பத்து ஓராயிரத்து நாநூற்று இருபது ரூபா எண்பத்து எட்டு சதம்) 2018, சனவரி 19 ஆந் திகதி வரையிலானது,

அத்துடன், தற்போது சொல்லப்பட்ட 2018, மே 17 ஆந் திகதி வரை ரூபா 3,79,65,209.97 மற்றும் ரூபா 3,35,81,420.88 மொத்தமாக ரூபா 7,15,46,630.85 (ஏழு கோடியே பதினைந்து இலட்சத்து நாற்பத்து ஆறாயிரத்து அறுநூற்று முப்பது ரூபா எண்பது ஐந்து சதம்) கொண்ட பணத்தொகை ஒன்று, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ தாபனத்திற்கு மீள வழங்கப்படவுள்ளதாலும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல். சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள ஆதனம், சொல்லப்பட்ட 2413 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனம் சொல்லப்பட்ட ரூபா 7,15,46,630.85 பணத்தொகையை 2018, சனவரி 19 ஆந் திகதி வரையிலும், அத்துடன் 2018, சனவரி 20 ஆந் திகதி முதல் மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் டலஸ் கெலாட்டினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.".

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் உள்ள மாநகர சபையின் எல்லைக்கு உட்பட்ட மாதம்பிற்றிய வீதியில் உள்ள முன்னதாக 1475/236, 14/6/233, 14/8/234 (1-3) ஆகிய வரிமதிப்பீட்டிலக்கங்களைக் கொண்டதும், தற்போது இலக்கம் 14/5/236 ஐக் கொண்ட "ரீ ஸ்ரோர்ஸ்" என தெரியப்படும் அம்பகஹாவத்த என அழைக்கப்படும் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாவற்றினதும் எல்லைகள் - வடகிழக்கு : காலஞ்சென்ற சப்மன் டயசின் பெருந்தோட்டத்தின் வரிமதிப்பீட்டிலக்கம் 309 ஐக் கொண்டுள்ள வளவுகள்; தென்கிழக்கு : வரிமதிப்பீட்டிலக்கம் 1473/ 238 ஐக் கொண்டுள்ள கத்தோலிக்க இளைஞர் சங்கத்தின் விளையாட்டு மைதானம் மற்றும் ஜோசப் டயசின் வரிமதிப்பீட்டிலக்கம் 1474/ 237 ஐக் கொண்டுள்ள வளவுகள் ; தென்மேற்கு : மாதம்பிற்றிய வீதி வடமேற்கு : பீ. ஈ. பெரேராவின் வரிமதிப்பீட்டிலக்கங்கள் 1479/232, 1480/232 ஐக் கொண்டுள்ள வளவுகள், அத்துடன் மூன்று றூட் மற்றும் இரண்டு பேர்ச் (0றூ. 3றூ. 2பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன், கொழும்பு மாவட்ட காணிப் பதிவகத்தில் A 724/ 270 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டது முன் சொல்லப்பட்ட பகிரப்பட்ட காணி. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நில அளவைக்கு அமைவானது, பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது,

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் உள்ள மாநகர சபைக்கு உட்பட்ட முகத்துவாரத்தில் உள்ள மாதம்பிற்றிய வீதியில் உள்ள வரிமதிப்பீட்டிலக்கம் 35 ஐக் கொண்டுள்ள அம்பகஹாவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். டி. டேவிட்டினால் தயாரிக்கப்பட்ட 1951.06.25 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 4518 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடமேற்கு : வரிமதிப்பீட்டிலக்கங்கள் 31 மற்றும் 27 ஐக் கொண்டுள்ள வளவுகள், அத்துடன் அதன் உப பிரிவுகள் (மாதம்பிற்றிய வீதி) ; வடகிழக்கு: வரிமதிப்பீட்டிலக்கம் 66 ஐக் கொண்டுள்ள வளவுகள் (முகத்துவாரம் வீதி) ; தென்கிழக்கு: வரிமதிப்பீட்டிலக்கங்கள் 41 மற்றும் 45/1 ஐக் கொண்டுள்ள வளவுகள் (மாதமபிற்றிய வீதி) ; தென்மேற்கு : மாதம்பிற்றிய வீதி மற்றும் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 4518 இற்கு அமைவான மூன்று றூட் மற்றும் மூன்று பேர்ச் (0றூ. றூ3 பே3) விஸ்தீரணத்தைக் கொண்டது.

முன் சொல்லப்பட்ட பகிரப்பட்ட காணி. மிக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நில அளவைக்கு அமைவானது, பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது,

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் உள்ள மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பிரிவு இலக்கம் 02, முகத்துவாரத்தில் உள்ள மாதம்பிற்றிய வீதியில் உடனான மாதம்பிற்றிய வீதி வரிமதிப்பீட்டிலக்கம் 35 ஐக் கொண்டுள்ள அம்பகஹாவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். எச். பேனாட் ஜோசப்பினால் தயாரிக்கப்பட்ட 1999.05.10 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 8/99 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணித்துண்டு 1 என அடையாளம் இடப்பட்ட சொல்லப்பட்ட காணித்துண்டின் எல்லைகள் - வடக்கு : மாதம்பிற்றிய வீதி, வரிமதிப்பீட்டிலக்கம் 31 ஐக் கொண்டுள்ள வளவுகள் ; கிழக்கு : அலுத்மாவத்தை வீதி, பொணவிஸ்ரா தோட்டம் ; தெற்கு : மாதம்பிற்றிய வீதி, வரிமதிப்பீட்டிலக்கம்

41 ஐக் கொண்டுள்ள வளவுகள் ; மேற்கு : மாதம்பிற்றிய வீதி, வரிமதிப்பீட்டிலக்கம் 41 ஐக் கொண்டுள்ள வளவுகள் மற்றும் மாதம்பிற்றிய வீதி, அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 8/ 99 இற்கு அமைவான மூன்று றூட் மற்றும் இரண்டு தசம் மூன்று ஐந்து பேர்ச் (0றூ. 3றூ. 2.35பே.) விஸ்தீரணமானது, கொழும்பு மாவட்ட காணிபதிவகத்தில் A974/ 23 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே.ஏ.எல்.ரீ.ரணவீர,
பி.பொ.மு.( சட்டம்) /சபைச் செயலாளர்.

10-404/6

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ - வெள்ளவத்தை கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

வாடிக்கையாளரின் பெயர் : மொகமட் தமீம் கௌஸ்

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

" மொகமட் தமீம் கௌஸ் கடப்பாடு உடையவர்களாகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பில், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கே. ஜி. என். எஸ். சில்வாவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016, பெப்புருவரி 11 ஆந் திகதியிடப்பட்ட 845 மற்றும் 2016, செத்தெம்பர் 02 ஆந் திகதியிடப்பட்ட 966 ஆகிய இலக்க முறிகள் மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2018, யூலை 02 ஆந் திகதியின்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மூலம் ஐந்து கோடியே அறுபத்து எட்டு இலட்சத்து அறுபத்து ஐந்தாயிரத்து எண்ணூற்று எண்பத்து ஆறு ரூபா தொண்ணூற்று ஒரு சதம் (ரூபா 5,68,65,886.91) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட 845 மற்றும் 966 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட (ரூபா 5,68,65,886.91) பணத்தொகையை 2018, யூலை 03 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக தீவு முழுவதற்குமான உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் டலஸ் கெலாட்டினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.".

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் உள்ள சல்பிற்றி கோறளவின் பள்ளே பற்றுவில் உள்ள கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மசங்கஸ்வீதிய கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட கொழும்பு மாநகர சபையின் எல்லைக்கு உட்பட்ட மசங்கஸ்வீதிய பிரிவு இலக்கம் 11 இல் உள்ள பழைய மூர் வீதியுடனான பழைய மூர் வீதி, வரிமதிப்பீட்டிலக்கம் 177 ஐ தற்போது கொண்டுள்ளது, உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். லோகநாதனினால் தயாரிக்கப்பட்ட 1980, ஓகத்து 18 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 2607 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியுடனான கட்டிடங்கள் மற்றும் அத்துடனான எல்லாவற்றினதும் (உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். டி. டேவிட்டினால் தயாரிக்கப்பட்ட 1945, திசெம்பர் 29 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 3810 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள ஒரே மாதிரியான காணி) எல்லைகள் - வடக்கு : புதிய மூர் வீதியின் வரிமதிப்பீட்டிலக்கங்கள் 198 G/ 200, 202, 204, 206 மற்றும் G/210; கிழக்கு : பழைய மூர் வீதி வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொ:டுள்ள வளவுகள் ; தெற்கு : பழைய மூர் வீதி ; மேற்கு : பழைய மூர் வீதி, வரிமதிப்பீட்டிலக்கம் 173 ஐக் கொண்டுள்ள வளவுகள் அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 2607 இற்கு அமைவான பதினெட்டு பேர்ச் (0றூ. 0றூ. 18பே.) விஸ்தீரணத்தைக் கொண்டது, கொழும்பு மாவட்ட காணிப் பதிவகத்தில் D17/132 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டது,

முன் சொல்லப்பட்ட பகிரப்பட்ட காணி மீள் நில அளவை செய்யப்பட்டது. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது,

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் உள்ள சல்பிற்றி கோறளவின் பள்ளே பற்றுவில் உள்ள கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மசங்கஸ்வீதிய கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட கொழும்பு மாநகர சபையின் எல்லைக்கு உட்பட்ட மசங்கஸ்வீதிய பிரிவு இலக்கம் 11 இல் உள்ள பழைய மூர் வீதியுடனான பழைய மூர் வீதி, வரிமதிப்பீட்டிலக்கம் 177 ஐ தற்போது கொண்டுள்ளதுடனான கட்டிடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நில அளவையாளர் பீ. சின்னத்தம்பியினால் தயாரிக்கப்பட்ட 1992, செத்தெம்பர் 26 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 3705 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு A என அடையாளம்

இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : புதிய மூர் வீதியின் வரிமதிப்பீட்டிலக்கங்கள் 198G/200, 202, 204, 206 மற்றும் G/ 210 ஐக் கொண்டுள்ள வளவுகள்; கிழக்கு: பழைய மூர் வீதி, வரிமதிப்பீட்டிலக்கம் 181 ஐக் கொண்ட வளவுகள்; தெற்கு : பழைய மூர் வீதி ; மேற்கு : பழைய மூர் வீதி, வரிமதிப்பீட்டிலக்கம் 173, அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 3705 இற்கு அமைவான பத்தொன்பது பேர்ச் (0றூ. 0றூ. 19பே.) விஸ்தீரணத்தைக் கொண்டது.

முன் சொல்லப்பட்ட பகிரப்பட்ட காணி மிக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மீள் நில அளவைக்கு அமைவாக பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது,

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் உள்ள சல்பிற்றி கோறளவின் பள்ளே பற்றுவில் உள்ள கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மசங்கஸ்வீதிய கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட கொழும்பு மாநகர சபையின் எல்லைக்கு உட்பட்ட மசங்கஸ்வீதிய பிரிவு இலக்கம் 11 இல் உள்ள பழைய மூர் வீதியுடனான பழைய மூர் வீதி, வரிமதிப்பீட்டிலக்கம் 177 ஐ தற்போது கொண்டுள்ளதுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நில அளவையாளர் கே. கனகசிங்கத்தினால் தயாரிக்கப்பட்ட 2012, ஏப்பிறல் 9 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 2558 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு X என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : புதிய மூர் வீதியின் வரிமதிப்பீட்டிலக்கங்கள் 198G/200, 202, 204, 206 மற்றும் G/ 210 ஐக் கொண்டுள்ள வளவுகள்; கிழக்கு : பழைய மூர் வீதி, வரிமதிப்பீட்டிலக்கம் 181 ஐ கொண்ட வளவுகள்; தெற்கு : பழைய மூர் வீதி ; மேற்கு : பழைய மூர் வீதி, வரிமதிப்பீட்டிலக்கம் 173, அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 2558 இற்கு அமைவான பத்தொன்பது பேர்ச் (0றூ. 0றூ. 19பே.) விஸ்தீரணத்தைக் கொண்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே.ஏ.எல்.ரீ.ரணவீர,
பி.பொ.மு.( சட்டம்) /சபைச் செயலாளர்.

10-404/10

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ - கறுவா தோட்டக் கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

வாடிக்கையாளரின் பெயர் : கஜஹின் கமகே ருமேஷா மனரங்கி

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

"கஜஹின் கமகே ருமேஷா மனரங்கி கடப்பாடு உடையவராகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ சார்பில், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். ஆர். பாயிசினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016.05.03 ஆந் திகதி இடப்பட்ட 2885 ஆம் இலக்க முறி, இத்துடனான அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ள வருமதியான கொடுப்பனவில் கஜஹின் கமகே ருமேஷா மனரங்கி ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ இனால் வழங்கப்பட்ட கடன் கொடுப்பனவிற்கான பாதுகாப்பாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ இனால் வழங்கப்பட்ட கடன் தொடர்பாக தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2018, ஏப்பிறல் 23 ஆந் திகதியின்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மூலம் ரூபா 1,62,40,024.71. (ஒரு கோடியே அறுபத்து இரண்டு இலட்சத்து நாற்பதாயிரத்து இருபத்து நான்கு ரூபா எழுபத்து ஒரு சதம்) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட 2885 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனம் சொல்லப்பட்ட ரூபா 1,62,40,024.71 பணத்தொகையை 2018, ஏப்பிறல் 23 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை மேலும் 2018, ஏப்பிறல் 24 ஆந் திகதி முதல் மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக தீவு முழுவதற்குமான உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் பீ. முத்துக்குமாரணவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் உள்ள சல்பிற்றி கோறளவின் பள்ளே பற்றுவில் உள்ள மஹரகம நகர சபையின் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் தம்பஹேன 528A கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட மஹரகமவில் உள்ள டெம்பிளேர்ஸ் வீதி, வரிமதிப்பீட்டிலக்கம 15/ 1 ஐக் கொண்டுள்ள ஹிக்கஹாவத்த மற்றும் தெல்கஹாவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நில அளவையாளர் கே. டபிள்யூ. டி. சந்திராணியினால் தயாரிக்கப்பட்ட 2015, ஒற்றோபர் 30 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 3186 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1A எனவடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட

காணியின் எல்லைகள் - வடக்கு: எச். டி. ஆரியபாலவின் ஆதனம் மற்றும் வீதி (10-15 அடி அகலமானது); கிழக்கு : வீதி 10-15 அடி அகலமானது மற்றும் காணித்துண்டு 1B ; தெற்கு : காணித்துண்டு 1B ; மேற்கு : எச். டி. ஆரியபாலவின் ஆதனம் மற்றும் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 3186 இற்கு அமைவான எட்டு தசம் ஒன்று இரண்டு பேர்ச் (0ஏ. 0றூ. 8.12பே.) விஸ்தீரணமானது.

2. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் உள்ள சல்பிற்றி கோறளவின் பள்ளே பற்றுவில் உள்ள மஹரகம நகர சபையின் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் தம்பஹேன 528A கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட மஹரகமவில் உள்ள டெம்பினேர்ஸ் வீதி, வரிமதிப்பீட்டிலக்கம் 15/ 2 ஐக் கொண்டுள்ள ஹிக்கஹாவத்த மற்றும் தெல்கஹாவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நில அளவையாளர் கே. டபிள்யூ. டி. சந்திராணியினால் தயாரிக்கப்பட்ட 2015, ஒற்றோபர் 30 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 3186 இல் விவரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1B என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டு 1A மற்றும் 10-15 அடி அகலமானது ; கிழக்கு : வீதி 10-15 அடி அகலமானது மற்றும் யசவதி கமகே மற்றும் டபிள்யூ. ஜீ. டி. லால் துஷ்மந்த ஆகியோரின் ஆதனம் ; தெற்கு : யசவதி கமகே, டபிள்யூ. ஜீ. டி. லால் துஷ்மந்த மற்றும் ஏ. டப்ளியூ. ஏ. குணவதி வீரகோன் ஆகியோரின் ஆதனம் ; மேற்கு : ஏ. டி. ஆரியபாலவின் ஆதனம் மற்றும் காணித்துண்டு 1A அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 3186 இற்கு அமைவான பதினான்கு தசம் பூஜ்யம் மூன்று பேர்ச் (0ஏ. 0றூ. 14.03பே.) விஸ்தீரணத்தைக் கொண்டது.

முன்சொல்லப்பட்ட பகிரப்பட்ட காணி, பின்வரும் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகுதிகளின் காணி பின்வருமாறு:

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் உள்ள சல்பிற்றி கோறளவின் பள்ளே பற்றுவில் உள்ள மஹரகம நகர சபையின் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் தம்பஹேன 528A கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட மஹரகமவில் உள்ள டெம்பிளேர்ஸ் வீதி, வரிமதிப்பீட்டிலக்கம் 15/1 மற்றும் 15/ 2 ஐக் கொண்டுள்ள ஹிக்கஹாவத்த மற்றும் தெல்கஹாவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். ஏ. டபிள்யூ. பெரேராவினால் தயாரிக்கப்பட்ட 2007, திசெம்பர் 4 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 909 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளம் இடப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : எச். டி. ஆரியபாலவினால் உரிமை கோரப்படும் அதே காணியின் பகுதி (வரைபட இலக்கம் 2115 இல் உள்ள காணித்துண்டு 4); கிழக்கு : வீதி (வரைபட இலக்கம் 2115 இல் உள்ள காணித்துண்டு 6) ; தெற்கு : யசவதி கமகே மற்றும் டபிள்யூ. டி. ஜி. லால் துஷ்மந்தவினால் உரிமை கோரப்படும் அதே காணியின் பகுதி (வரைபட இலக்கம் 2115 இல் உள்ள காணித்துண்டு 1) ; மேற்கு : முன்னர் எம். எஸ். பெரேராவினால் உரிமை கோரப்பட்ட காணி, தற்போது ஏ. டபிள்யூ.கே. குணவதி வீரக்கோனினால் உரிமை கோரப்படுவது (வரைபட இலக்கம் 2115 இல் உள்ள காணித்துண்டு 1) அத்துடன் எச். டி. ஆரிய பாலவினால் உரிமை கோரப்படும் அதே காணியின் பகுதி (வரைபட இலக்கம் 2115 இல் உள்ள காணித்துண்டு 4) அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 909 இற்கு அமைவான இருபத்து இரண்டு தசம் ஒன்று ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 22.15பே.) விஸ்தீரணத்தைக் கொண்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே.ஏ.எல்.ரீ.ரணவீர,
பி.பொ.மு.( சட்டம்) /சபைச் செயலாளர்.

10-404/7

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ - அநுராதபுரக் கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

வாடிக்கையாளரின் பெயர் : திசாநாயக்க முதியான்சலாகே லோரனி இனோக்கா திசாநாயக்க

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

“திசாநாயக்கா முதியான்சலாகே லோரணி இனோக்கா திசாநாயக்க கடப்பாடு உடையவராகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ சார்பில், அனுராதபுரம் பிரசித்த நொத்தாரிசு யூ. விஜயரட்னவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.05.23 ஆந் திகதி இடப்பட்ட 2250 ஆம் இலக்க, 2015.03.12 ஆந் திகதியிடப்பட்ட 2561 ஆம் இலக்க மற்றும் 2016.03.30 ஆந் திகதியிடப்பட்ட 2880 ஆகிய இலக்க முறிகள் மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள் ஆதலாலும், 2018, மே 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மூலம் ஐம்பத்து இரண்டு இலட்சத்து எண்பத்து ஒன்பதாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று ஐந்து ரூபா பத்து சதம் (ரூபா 52,89,395.10) கொண்ட பணத்தொகை ஒன்று சொல்லப்பட்ட ஏனைய கடன் வசதிகளுடன் வீட்டு கடன் வசதி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டது தொடர்பாக, தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல்

(விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட 2250, 2561 மற்றும் 2880 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 52,89,395.10 பணத்தொகையை 2018, யூன் 01 அந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை மேலும் வட்டியுடனும், விளம்பர செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக தீவு முழுவதற்குமான உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் பீ. முத்துக்குமாரணவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

வட மத்திய மாகாணம், அநுராதபுர மாவட்டத்தில் உள்ள நுவரகம் பலாத்த கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள கணதர கோறளவில் உள்ள 246 – வன்னியன்குளம கிராமத்தில் உள்ளது. உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். பாலேந்திரனினால் தயாரிக்கப்பட்ட 2010.06.02 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 2010/01/74 இல் உள்ள காணித்துண்டு இலக்கம் 04 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியானது. உரிமம் பெற்ற நில அளவையாளர் பீ. பி. இலங்கசிங்கவினால் தயாரிக்கப்பட்ட 2003.09.30 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கத்தில் 2003/AN/427 இல் உள்ள காணித்துண்டு 01 இன் உப பிரிவு காணியின் எல்லைகள் - வடக்கு: FVP 259 இல் உள்ள காணித்துண்டு 605; கிழக்கு: வரைபட இலக்கம் 2010/01/54 இல் உள்ள காணித்துண்டு 02 மற்றும் வீதி; தெற்கு: வரைபடம் 2003/AN/427 இல் உள்ள காணித்துண்டு 3 மற்றும் வரைபட இலக்கம் 2010/01/54 இல் உள்ள காணித்துண்டு 02; மேற்கு: FVP 259 இல் உள்ள காணித்துண்டு 606. பதினெட்டு பேர்ச் (0ஏ. 0றூ. 18பே.) அல்லது பூஜ்யம் தசம் பூஜ்யம் நான்கு ஆறு இரண்டு ஹெக்டயர் (0.0462 ஹெக்) விஸ்தீரணத்துடனான கட்டடங்கள், மரங்கள், பயிர்செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாம்.

மிக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நில அளவைக்கு அமைய மேலே குறிப்பிடப்பட்டுள்ள காணி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது:

வட மத்திய மாகாணம், அநுராதபுர மாவட்டத்தில் உள்ள நுவரகம் பலாத்த; கிழக்கு : பிரதேச செயலகப் பிரிவில் உள்ள கணதர கோறளவில் உள்ள 246 – வன்னியன்குளம கிராம அலுவலர் பிரிவில் உள்ள வன்னியன்குளம கிராமத்தில் உள்ளது, உரிமம் பெற்ற நில அளவையாளர் பிரியந்த சமரதுங்கவினால் தயாரிக்கப்பட்ட 2010.11.02 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 2010/537 இல் காணித்துண்டு 04 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். பாலேந்திரனினால் தயாரிக்கப்பட்ட 2010.06.02 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 2010/01/74 இல் உள்ள காணித்துண்டு 04 என்பதுடன், பிரசித்த நொத்தாரிசு பீ. காரியவாசத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2010.09.01 ஆந் திகதியிடப்பட்ட உறுதி இலக்கம் 542 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணியுமாகும், அதன் எல்லைகள் - வடக்கு: FVP 259 இல் உள்ள காணித்துண்டு 605; கிழக்கு: வரைபட இலக்கம் 2010/01/54 இல் உள்ள காணித்துண்டு 02 மற்றும் வீதி (பி.ச.); தெற்கு: வரைபட இல. 2003/AN/427 இல் உள்ள காணித்துண்டு 3 மற்றும் வரைபட இலக்கம் 2010/01/54 இல் உள்ள காணித்துண்டு 02; மேற்கு: FVP 259 இல் உள்ள காணித்துண்ட்டு 606 (உலர் ஓடைக்கான ஒதுக்கீடு). பதினெட்டு பேர்ச் (0ஏ. 0றூ. பே18) அல்லது பூஜ்யம் தசம் பூஜ்யம் நான்கு ஆறு இரண்டு ஹெக்டயர் (0.0462 ஹெக்.) விஸ்தீரணத்துடனான கட்டடங்கள், மரங்கள் மற்றும் பயிர் செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே.ஏ.எல்.ரீ.ரணவீர,
பி.பொ.மு.( சட்டம்) /சபைச் செயலாளர்.

10-404/8

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ

1990ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கடன் கணக்கு இலக்கம் : 2082306
தருண்ட இன்டநெஷனல் (பிரைவேட்) லிமிட்டெட்

கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் 2017.06.16 ஆந் திகதி கூடிய கூட்டத்தில் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

"கடன் எடுத்த தருண்ட இன்டநெஷனல் (பிரைவேட்) லிமிட்டெட், இலங்கை கம்பனி சட்டப்படி ஸ்தாபிக்கப்பட்டு ஹோக்கந்தர வடக்கு ரத்தனாராம ரோட், இலக்கம் 378/1, என்ற பதிவு விலாசத்தில் அமைந்துள்ளதும் மற்றும் காணியை ஈடு வைத்த திலான் தில்ருக் வீரசேகரவும் மற்றும் யாப்பகே வீரசேகர கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு டப்ளியூ. ஐ. ஜயவீரவின் 2013.05.06 ஆந் திகதியுடைய ஈட்டு முறி இலக்கம் 3757 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும், அத்துடன் மேற்படி முறி பிரகாரம் கொமர்ஷல் பாங்க ஒப் சிலோக் பீஎல்சீக்கு ரூபா 6,287,908.63 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும், அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ

பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் படி மேற்படி ஈட்டு முறி இலக்கம் 3757 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத் தொகையான ரூபா 62,87,908.63 வுடனும் மேலும் 2017.05.05 ஆந் திகதி முதல் ஏலத் திகதி வரை ரூபா 60,00,000.00 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 14.0% சத வட்டியும், விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு - 12, புதுக்கடை வீதி, இலக்கம் 200, 2 ஆவது மாடியில் ஏலதாரருக்கு திரிவன்கா சேனாநாயக்க உத்தரவு பெற்ற ஏலதாரர் எல். பி. சேனாநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.''

### மேல் சொல்லப்பட்ட அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லே பத்து, ஏவகம கோரளையில் கடுவெல மாநகர சபை எல்லையில் கடுவெல மாவட்ட செயலாளர் எல்லையில் இலக்கம் 494 ஹோக்கந்தர வடக்கு கிராம அலுவலர் எல்லையில் ஹோக்கந்தர வடக்கு கிராமத்தில் உள்ள முக்கலான வத்த காணிக்கு நில அளவையாளர் கே. டப்ளியூ. எஸ். கே. விக்கனராஜா 2013.03.31 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 2013-362 இல் காண்பிக்கப்பட்ட லொட் A காணியின் எல்லைகள் - வடக்கு: டி. டி. வீரசேகரவுக்குச் சொந்தமான (இக்காணியின் மிகுதி பகுதி) காணி; கிழக்கு: ஜி. கல்கமுவகேவுக்குச் சொந்தமான காணி (வரைபட இலக்கம் 691 இல் லொட் 7); தெற்கு: ரோட் (20 அடி) வரைபட இலக்கம் 691 இல் லொட் 3 மற்றும்; மேற்கு : டி. ஏ. வெனடொட் சொந்தமான காணி (வரைபட இலக்கம் 691 இல் லொட் 2) இக்காணியின் விஸ்தீரணம் 0ஏ. 0றூ. 20.31பே. மேற்படி வரைபட இலக்கம் 2013-362 இன் படி.

மேலே சொல்லப்பட்ட காணி, இக்கீழ் விபரிக்கப்பட்ட காணி மீண்டும் அளந்த காணியாகும்.

மேற்படி ஹோக்கந்தர வடக்கு கிராமத்தில் உள்ள முகலானவத்த காணிக்கு நில அளவையாளர் எஸ். ஏ. விஜேசிங்கவின் 1991.12.08 ஆந் திகதிய வரைபட இலக்கம் 691 இல் காண்பிக்கப்பட்ட லொட் 6 இன் எல்லைகள் - வடக்கு: இக்காணியின் மிகுதி காணி; கிழக்கு: வரைபட இலக்கம் 691 இல் லொட் 7, தெற்கு: வரைபட இலக்கம் 691 இல் லொட் 3; மேற்கு: வரைபட இலக்கம் 3537 இல் லொட் 2 இக்காணியின் விஸ்தீரணம் 0ஏ. 0றூ. 20.31பே. மேற்படி வரைபட இலக்கம் 691. இக்காணி ஹோமாகம காணி பதிவகத்தில் B 79/19 இல் பதிவு செய்யப்பட்ட காணி.

இக்கீழ் விபரிக்கப்பட்ட காணியூடாக பாதைக்கு பாவிக்கும் உரிமையுடனும்,

மேற்படி ஹோக்கந்தர வடக்கு கிராமத்தில் உள்ள முகலானவத்த காணிக்கு நில அளவையாளர் எஸ். ஏ. விஜேசிங்கவின் 1991.12.08 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 691 இல் காண்பிக்கப்பட்ட லொட் 3 எல்லைகள் - வடக்கு: லொட்ஸ் 1, 2, 6 மற்றும் 7; கிழக்கு: ரத்தனராம ரோட்; தெற்கு: லொட் 4, 5 மற்றும் 8; மேற்கு: இக்காணியின் மிகுதிக் காணி. இக்காணியின் விஸ்தீரணம் 0ஏ. 0றூ. 16.59பே. இக்காணி ஹோமகம காணி பதிவகத்தில் B 79/20 இல் பதிவு செய்யப்பட்ட காணியாகும்.

(திருமதி) ரன்ஜனி கமகே,
கம்பனிச் செயலாளர்.

2017, யூன் 16.

10-365

---

### சம்பத் வங்கி பீ. எல். சீ.

( முன்பு சம்பத் வங்கி லிமிட்டட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

ஐ. யு. ஹப்புஆரச்சி
கணக்கு இல.: 1069 5307 9981

2010, ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:-

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசுவான ஆர். ஜீ. டீ. சுனாரி என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, நவெம்பர் 30 ஆந் திகதியிடப்பட்ட இல 1905 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக் கொண்ட கடனை, கடன்பட்டவர்கள் என்ற வகையில் கடமைப்பட்டுள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இந்ரஜித் உப்பலா ஹப்புஆரச்சி என்பவர் மீள் செலுத்தத்தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இல. 1905 எனும் ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் பத்து இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து முந்நூற்று தொண்ணூற்று எட்டு ரூபா இருபத்தைந்து சதம் (ரூ. 10,51,398.25) 2010, யூலை 20 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட பத்து இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து முந்நூற்று தொண்ணூற்று எட்டு ரூபா இருபத்தைந்து சதம் (ரூ. 10,51,398.25) 2010, யூலை 21 ஆந் திகதி முதல் இல. 1905 எனும் ஈட்டுமுறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒன்பது இலட்சத்து எழுபதினாயிரத்து ஐந்நூற்று ஐம்பத்தொன்பது ரூபா இருபது சதம் (ரூபா 9,70,559.20) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபது வீதம் (20%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள்,

ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 1905 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.".

### அட்டவணை

(1) மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளையின் மெத பத்துவின் ஹோமாகமை பிரதேச சபை எல்லைகளுக்குள் வட்டரக்க கிராமத்தில் அமைந்த "கொஸ்ஹேன எஸ்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. கே. எஸ். பம்முனுசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2006, திசெம்பர் 26 ஆந் திகதியிடப்பட்ட இல. 2006/ 215 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : வீதி (இல. 4643 எனும் வரைபடத்தில் லொட் 33) ; கிழக்கு : லொட் R1 ; தெற்கு : லொட் 03 ; மற்றும் மேற்கு : வீதி (இல. 4643 எனும் வரைபடத்தில் லொட் 33) ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்து தசம் மூன்று சைபர் பேர்ச் (0ஏ. 0றூ. 10.30பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப் பட்ட இல. 2006/ 215 எனும் வரைபடத்திற்கு அமைவாக அவிஸ்ஸாவலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் N337/230 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேற்கூறப்பட்ட வட்டரக்க கிராமத்தில் அமைந்த "கொஸ்ஹேன எஸ்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. கே. எஸ். பமுனுசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2006, திசெம்பர் 26 ஆந் திகதியிடப்பட்ட இல. 2006/215 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : லொட் 1; கிழக்கு : லொட் R 1 ; தெற்கு : லொட் 02 ; மற்றும் மேற்கு : வீதி (இல. 4643 எனும் வரைபடத்தில் லொட் 33) ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்து பேர்ச் (0ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் கூறப்பட்ட இல. 2006/215 எனும் வரைபடத்திற்கு அமைவாக அவிஸ்ஸாவலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் N 337/ 2009 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வழி மீதும் மற்றும் பொதுவாக அதற்கொத்த ஏனையவற்றின் மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

லொட் R 1 (12 அடிகள் அகல வீதி) மற்றும் காட்டப்பட்ட ஏனைய வீதிகள்

லொட் 33 (15 அடிகள் அகல வீதி) இல. 2006/ 215 எனும் வரைபடத்திற்கு அமைவாக அவிஸ்ஸாவலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் N 343/ 69 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10-414

---

### பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்களினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(எம்பிலிப்பிட்டி கிளை)

வாடிக்கையாளரின் பெயர்: சசிக்க ருவன் ஜயவீர என்ற சசின்க ருவன் ஜயவீர, ஜயவீர கொன்ஷ்ரக்ஷன்ஸ் அன்ட் சப்லையர்ஸ் இன் ஏக உரிமையாளர்

2018, ஓகத்து 29 ஆந் திகதியன்று நடைபெற்ற பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப.வ.க. இன் பணிப்பாளர் சபை கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது :-

"கடப்பாடுடையவரான/ ஈடுவைத்தவரான சசிக்க ருவன் ஜயவீர என்ற சசின்க ருவன் ஜயவீர, ஜயவீர கொன்ஷ்ரக்ஷன்ஸ் அன்ட் சப்லையர்ஸ் இன் ஏக உரிமையாளர், பதிவு இல. பீகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. இன் சார்பில் இரத்தினபுரியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு கே. எஸ். அபேரத்ன அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 02.11.2016 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 7959 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதாதலாலும்,

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. (இதனகத்துப் பின்னர் சில வேளைகளில் "வங்கி" என அழைக்கப்படும்) இற்கு சொல்லப்பட்ட ஈட்டு முறி இலக்கம் 7959 இன் மூலம் 2018.08.02 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதி வரை நாற்பத்தெட்டு இலட்சத்து அறுபத்தேழாயிரத்து ஐந்நூற்று எழுபத்தைந்து ரூபா பத்தொன்பது சதம் (ரூ. 48,67,575.19) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு இருபது வீத (20%) வட்டியுடனும் சேர்த்து பணமுதல் கணக்கின்மீது ஐம்பது இலட்சத்து நாற்பதாயிரத்து நூற்று ஐம்பத்தொன்பது ரூபா எண்பத்திரண்டு சதம் (ரூ. 50,40,159.82) கொண்ட தொகை

மற்றும் 2018.08.01 ஆந் திகதி வரையான வட்டியும் தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும்,

சொல்லப்பட்ட தொகை ஐம்பது இலட்சத்து நாற்பதாயிரத்து நூற்று ஐம்பத்தொன்பது ரூபா எண்பத்திரண்டு சதம் (ரூபா 50,40,159.82) ஐ, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் மற்றும் மேற்கூறப்பட்ட திகதியிலிருந்து விற்பனை திகதி வரையான வட்டியுடனும் சேர்த்து எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்ய, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், கண்டி மாவில்மடை, துட்டுகெமுனு மாவத்தை, இல. 369/1 ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களுக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கிறதென இத்தால் தீர்மானிக்கின்றது.".

**அட்டவணை**

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், கொலொன்ன கோறளை, தியபொதகம் பற்று, எம்பிலிப்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவு, எம்பிலிப்பிட்டி நகர சபை எல்லைகளுக்குள், பள்ளேகமை கிராம அலுவலர் பிரிவு, எம்பிலிப்பிட்டி, பள்ளேகமையில் அமைந்துள்ளதும் "பன்சலைவத்தை" என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் இரந்ததிஸ்ஸ கொட்டம்பகே அவர்களால் தயாரிக்கப்பட்டு 11.07.1981 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 218 இல் துண்டு பி என குறிப்பிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து: சொல்லப்பட்ட வரைபடத்தில் குறிக்கப்பட்ட வீதி பாவிப்பதற்கான உரிமையுடன் சேர்த்து இதன் எல்லைகளாவன - வடக்கு : இதே காணியின் பாகம் ; கிழக்கு: ஓடை ; தெற்கு : ஓடை ; மேற்கு : வீதி. இது பதினைந்து தசம் ஒன்பது சைபர் பேர்ச்சுக்கள் (0ஏ.0றூ. 15.90பே.) அல்லது 0.0402 ஹெக்டேயர் விஸ்தீரணங்கொண்டது; எம்பிலிப்பிட்டி காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் எல் 125/54 இன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## Shashinka Ruwan Jayaweera alias Shashika Ruwan Jayaweera, Sole Proprietor of Jayaweera Constructions and Suppliers

சொல்லப்பட்ட காணி, கீழே விவரிக்கப்பட்ட காணியின் உள்ளிருந்தும் புறமுமாக பிரித்து நிர்ணயிக்கப்பட்ட பாகமாகும்:-

மேற்கூறப்பட்டவாறு எம்பிலிப்பிட்டி, பள்ளேகமையில் அமைந்துள்ளதும் "பன்சலவத்தை" என அழைக்கப்படும் காணியின் (நில அளவையாளர் நாயகத்தினால் உறுதி செய்யப்பட்ட ரீபீ இல. S33987 இல் துண்டு 435 இன் நிர்ணயிக்கப்பட்ட பாகமாக இருக்கின்ற) நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். இதன் எல்லைகளாவன - வடக்கு: வீதி; கிழக்கு : வீ. ஜீ. பியசேனவினால் உரிமைகோரப்படும் காணி; தெற்கு : ஓடை; மேற்கு : இதே காணியின் எஞ்சிய பாகம். இது, ஒரு றூட் (0ஏ. 1றூ. 00பே.) விஸ்தீரணம் கொண்டது. எம்பிலிப்பிட்டி காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் ஜீ 75/35 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட காணி, கீழே விவரிக்கப்பட்ட காணியின் உள்ளிருந்தும் புறமுமாக பிரித்து நிர்ணயிக்கப்பட்ட பாகமாகும்:-

மேற்கூறப்பட்டவாறு எம்பிலிப்பிட்டி, பள்ளேகமையில் அமைந்துள்ளதும் "பன்சலவத்தை" என அழைக்கப்படும் காணியின் நில அளவையாளர் நாயகத்தினால் உறுதி செய்யப்பட்ட ரீபீ இல. S33987 இல் துண்டு 435 என குறிப்பிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித் துண்டு முழுவதும். இதன் எல்லைகளாவன - வடக்கு : துண்டு 438 p ; கிழக்கு : துண்டு 438 p; தெற்கு : துண்டு 438 p ; மேற்கு : துண்டு 126. இது, இரண்டு றூட் (0ஏ. 2றூ. 00பே.) விஸ்தீரணங்கொண்டது. எம்பிலிப்பிட்டி காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் ஜீ 43/88 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ராஜித கருணாதிலக்க,
உதவி முகாமையாளர் - அறவீடுகள்

10-372

---

## சம்பத் வங்கி பீ. எல். சீ.

( முன்பு சம்பத் வங்கி லிமிட்டட் என அழைக்கப்பட்டது)

*2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

ஓ. சீ. பதுகே
கணக்கு இல.: 0212 5000 0100

2018, ஒகத்து மாதம் 30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:-

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு-2, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்து சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக கம்பஹா பிரசித்த நொத்தாரிசுவான ஏ. டபிள்யூ. டீ. எம். வித்தானகே என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016, திசெம்பர் 19 ஆந் திகதியிடப்பட்ட இல. 937 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக

இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக் கொண்ட கடனை, கடன்பட்டவர் என்ற வகையில் கடன்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஒஸ்மி சமிந்த பதுகே என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால் கூறப்பட்ட இல. 937 எனும் ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் நான்கு கோடியே இருபத்தி ஏழாயிரத்து நூற்று ஐம்பத்தி ஏழு ரூபா இருபது சதம் (ரூபா 4,00,27,157.20) 2018, யூலை 24 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட நான்கு கோடியே இருபத்தி ஏழாயிரத்து நூற்று ஐம்பத்தி ஏழு ரூபா இருபது சதம் (ரூபா 4,00,27,157.20) 2018, யூலை 25 ஆந் திகதி முதல் இல. 937 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை மூன்று கோடியே எழுபத்தி நான்கு இலட்சத்து எண்பத்தி மூவாயிரத்து இருநூற்று பத்தொன்பது ரூபா நான்கு சதம் (ரூபா 3,74,83,219.04) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் ஆறு தசம் ஐந்த வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 937 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ.கே.ஈ.சேனாபத்தி என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.”.

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு மாநகர சபை மற்றும் பிரதேச செயலாளர் எல்லைகளுக்குள் உடயார் தோப்புவ கிராம அலுவலர் பிரிவின் வோட் இல. 10, 1 ஆவது போலவளானையில் அமைந்த சென் ஜூட் இடம், வரிமதிப்பீட்டு இல. 08, ஐ ஏற்ற “தலகாஹாவத்த எனும் சீயவத்த” என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. எஸ். எஸ். மெண்டிஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2016, ஏப்பிறல் 3 ஆந் திகதியிடப்பட்ட இல. 6300 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : சிரில் பெர்ணாண்டோ உரிமம் கோரும் காணி மற்றும் வீதி (10 அடிகள் அகலம்) ; கிழக்கு: ரீ. எஸ். பஸ்நாயக்க மற்றும் ஏனையோர் உரிமம் கோரும் காணி ; தெற்கு : தலாதூவ வீதி ; மற்றும் மேற்கு : எச். ஜே. பஸ்நாயக்க உரிமம் கோரும் காணி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் பதின் னான்கு தசம் இரண்டு ஒன்று பேர்ச்சுகள் (0ஏ. 1றூ. 14.21பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதற்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 6300 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் 1 உத்தரவுபெற்ற நில அளவையாளர் ரீ. கே. தனசேன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1987, திசெம்பர் 27 ஆந் திகதியிடப்பட்ட இல. 54 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 01 இன் மீள் அளவீடாகும் இது கீழே விபரிக்கப்பட்ட காணியின் ஒரு பகுதியாகும்.

கூறப்பட்ட 1 ஆவது போலவளானையில் அமைந்த “தலகாஹாவத்த எனும் சீயவத்த” என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. எஸ். ஏ. கொஸ்த்தா என்பவரால்தயாரிக்கப்பட்ட 1968, ஏப்பிறல் 5 ஆந்திகதியிடப்பட்ட இல. 608 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்து பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன : - வடக்கு : யூ. ஃபொன்சேக்கா என்பவரின் வாரிசுகளின் தலகாஹாவத்தையின் லொட் B ; கிழக்கு : லொட் 3 ; தெற்கு : தலாதூவ வீதி ; மற்றும் மேற்கு : லொட் 1, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் இருபத்தி இரண்டு தசம் ஆறு பேர்ச்கள் (0ஏ. 1றூ. 22.6பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 608 எனும் வரைபடத்திற்கு அமைவாக நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் G 18/121 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10-411/2

---

### சம்பத் வங்கி பீ. எல். சீ.

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

ஓ. சீ. பதுகே
கணக்கு இல.: 0212 5000 0100

2018, ஓகத்து மாதம் 30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:-

“PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு-2, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்து சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக கம்பஹா பிரசித்த நொத்தாரிசுவான ஏ. டபிள்யூ. டீ. எம். வித்தானகே என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018, சனவரி 8 ஆந் திகதியிடப்பட்ட இல. 2110 எனும் ஈட்டு முறியின் மீது

அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக் கொண்ட கடனை, கடன்பட்டவர்கள் என்ற வகையில் கடன்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஒஸ்மி சமிந்த பதுகே என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இல. 2110 எனும் ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் ஒரு கோடியே அறுபத்தி நான்கு இலட்சத்து தொண்ணூற்றி ஆராயிரத்து முந்நூற்று எழுபத்தி ஒன்பது ரூபா அறுபத்தி ஐந்து சதம் (ரூ. 1,64,96,379.65) 2018, யூலை 24 ஆந் திகதி சம்பத் பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட ஒரு கோடியே அறுபத்தி நான்கு இலட்சத்து தொண்ணூற்றி ஆராயிரத்து முந்நூற்று எழுபத்தி ஒன்பது ரூபா அறுபத்தி ஐந்து சதம் (ரூபா 1,64,96,379.65) 2018, யூலை 25 ஆந் திகதி முதல் இல. 2110 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே ஐம்பத்தி எட்டு இலட்சத்து நாற்பத்தி ஒன்பதினாயிரத்து முந்நூற்று இருபத்தி ஐந்து ரூபா எழுபத்தி ஒன்பது சதம் (ரூபா 1,58,49,325.79) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் ஆறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 2110 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ.கே.ஈ.சேனாபத்தி என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.''.

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளே தாசியே பத்து மினுவங்கொடை பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லைகளுக்குள் வத்துமுள்ள இல. 133 கிராம அலுவலர் பிரிவின் வத்துமுள்ளையில் அமைந்த தொரனகொட வீதி, வரிமதிப்பீட்டு இல. 295, ஐ ஏற்ற ''எம்பரெல்லாகாஹாவத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. கே. ஏ. எஸ். பத்மினி என்பவரால் தயாரிக்கப்பட்ட 2013, ஏப்பிறல் 23 ஆந் திகதியிடப்பட்ட இல. 10260 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: வத்துமுள்ள பன்சலை காணி மற்றும் பெர்ணாண்டோ என்பவரின் காணி ; கிழக்கு : மில்ட்டன் பெரேரா என்பவரின் காணி; தெற்கு : மில்ட்டன் பெரேரா என்பவரின் காணி மற்றும் அஸ்கிரிய முதல் தொரணகொட வரையான பிரதான வீதி ; மற்றும் மேற்கு : வத்துமுள்ள பன்சலை காணி மற்றும் பெர்னான்டோ என்பவரின் காணி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் முப்பது பேர்ச்சுகள் (0ஏ. 1றூ. 30பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதற்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 10260 எனும் வரைப்படத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் 1 கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

கூறப்பட்ட ''எம்பரெல்லாகாஹாவத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். ஏ. வீ. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1989, யூன் 02 ஆந் திகதியிடப்பட்ட இல. 61/89 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A எனக் குறிடப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : முன்னர் கரனோலிஸ் சில்வா தற்போது எம். ஏ. ஜயசிங்ஹவின் யக்கார வத்தை; கிழக்கு : லொட் B; தெற்கு : தொரனகொடவிற்கான வீதி மற்றும்; மேற்கு : முன்னர் இஸான் அப்புவினது தற்போது வத்துமுள்ள பன்சலை காணி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் முப்பது பேர்ச்சுகள் (0ஏ.1றூ.30பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 61/89 எனும் வரைபடத்திற்கு அமைவாக கம்பஹா காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் K 190/60 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10-411/3

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கே எல் எம் மனோஹரன் மற்றும் டீ மனோஹரன்
கணக்கு இல. 1123 5484 4962

2018.06.28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும், ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

''PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு – 2, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக கண்டி பிரசித்த நொத்தாரிவான ஏ டப்ளியூ எஸ்

கல்ஹாரி என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015, யூலை 21 ஆந் திகதியிடப்பட்ட இல. 990 மற்றும் 2017 திசெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 3069 எனும் ஈட்டு முறிகளின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை கடமைப்பட்டவர்கள் என்ற வகையில் இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் கைத்தாம்பிள்ளை லியோ மாஷல் மனோஹரன் மற்றும் டெஸ்மன் மனோஹரன் என்பவர்களில் கடன்பட்டவர்கள் என்ற வகையில் கூறப்பட்ட கைத்தாம்பிள்ளை லியோ மாஷல் மனோஹரன் என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால் கூறப்பட்ட இலக்கங்கள் 990 மற்றும் 3069 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் ஒரு கோடியே அறுபத்தி இரண்டு இலட்சத்து என்பத்தி ஓராயிரத்து நாநூறு ரூபா (ரூபா 1,62,81,400) 2018, யூன் 11 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் குறிப்பிடப்பட்ட ஒரு கோடியே அறுபத்தி இரண்டு இலட்சத்து எண்பத்தி ஓராயிரத்து நாநூறு ரூபா (ரூபா 1,62,81,400) 2018, யூன் 12 ஆந் திகதி முதல் இலக்கங்கள். 990 மற்றும் 3069 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே ஐம்பத்தி ஆறு இலட்சத்து நாற்பதினாயிரம் ரூபா (ரூபா 1,56,40,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் ஆறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள். 990 மற்றும் 3069 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ டப்ளியு ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கங்கவட்ட கோரலே பிரதேச செயலாளர் பிரிவு கங்கவட்ட கோரளேயின் யட்டிநுவரயின் கங்கவட்ட கோரளே பிரதேச சபை எல்லைகளுக்குள் போவலவத்த – 247 கிராம அலுவலர் பிரிவின் ஹந்தானையில் அமைந்த மௌண்ட ப்ளசன்ட் எஸ்ட்டேட் என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜே. ஆர். ஏ. டி. ஜே. செனவிரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2014, செத்தெம்பர் 26 ஆந் திகதியிடப்பட்ட இல. 2217 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் - நிர்ணயிக்கப்பட்டு லொட் 01 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : அதே காணியின் எஞ்சிய பகுதியை பிரிக்கும் சுற்று மதில் ; கிழக்கு : பிரதான வீதியிலிருந்து கண்டி ஹீரஸ்ஸகல பிரதான வீதிக்கான வீதி ; தெற்கு : அதே காணியின் எஞ்சிய பகுதி மற்றும் ; மேற்கு : பிரதான வீதியிலிருந்து வீடுகள் வரையான வீதி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பது பேர்ச் (0ஏ. 0றூ. 30பே.) 0.0759 ஹெக்டேயர்கள் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம் மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2217 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் A 432/257 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது (குறிப்புகள் பந்தி)

கூறப்பட்ட லொட் 01 கீழே குறிப்பிடப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்:

மேற்கூறப்பட்ட ஹந்தானையில் அமைந்த மௌண்ட் ப்ளசன்ட எஸ்ட்டேட் என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் பீ. ரூப்பசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1994 ஒற்றோபர் 06 ஆந் திகதியிடப்பட்ட இல. 1403 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 01 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : அதே காணியின் எஞ்சிய பகுதி; கிழக்கு : கண்டிக்கான பிரதான வீதிக்கான ஹீரஸ்ஸகலை வழியாக செல்லும் வீதி; தெற்கு : அதே காணியின் எஞ்சிய பகுதி மற்றும் ; மேற்கு : பிரதான வீதியிலிருந்து பங்களா வரையான வீதி அத்துடன் உத்தரவுபெற்ற நில அளவையாளர் பிரன்சிஸ் மாப்பளகம என்பவரால் தயாரிக்கப்பட்ட 1946 திசெம்பர் 20 மற்றும் 21 ஆந் திகதிகளிடப்பட்ட இல 2143 எனும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட வழி மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பது பேர்ச். (0ஏ. 0றூ. 30பே.) 0.0759 ஹெக்டயார்கள் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1403 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம் /பக்கம் A 432/257 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது (குறிப்புகள் பந்தி)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10-412

---

### டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க,வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்)சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர்

சபையினால் 2018, மே 30 ஆந் திகதியன்று ஏகமனதாக நிறை வேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

வத்தளையைச் சேர்ந்த கங்காணி அச்சி ஹக்கல்லகே திலக் நந்தன சுமணரத்ன மற்றும் நதீஜா நேத்ராஞ்சலி ஜயசிங்க என்போர், (டீஎவ்சீசீ வர்தன வங்கி பீஎல்சீ இன் அடுத்துறுநரான) டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ சார்பில் பிரசித்த நொத்தாரிசு பிரதீபா பீ. விக்ரமதிலக்க என்பவரினால் இரண்டும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.05.28 ஆந் திகதிய 1295 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும் 2015.02.19 ஆந் திகதிய 1570 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளனராதலாலும்.

அத்துடன் 2018, மாச்சு 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக எழுபத்தொன்பது இலட்சத்து ஐம்பத்திரெண்டாயிரத்து முந்நூற்றியைம்பத்தேழு ரூபா இருபத்தேழு சதம் (ரூபா 79,52,357.27) கொண்ட தொகையும் 2018, ஏப்பிறல் 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனனத் தேதிவரை நாற்பத்தொன்பது இலட்சத்து நாற்பத்தையாயிரத்து நானூற்றித்தொண்ணூற்றிநான்கு ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூ. 49,45,494.57) கொண்ட தொகைமீது 2018.07.02 ஆந் திகதி வரை ஆண்டொன்றுக்குப் பத்தொன்பது சதவீத (19%) வட்டியும் அதன்பின்னர் ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் 1 ஆவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி வடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ ஸ்பொட்) ஆண்டொன்றுக்கு எட்டுச் சதவீத (8%) வட்டியும் அத்துடன் இருபத்தொரு இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து எழு நூற்றியெழுபத்தெட்டு ரூபா ஐம்பத்திரெண்டு சதம் (ரூ 21,68,778.52) கொண்ட தொகை மீது 2019.02.25 ஆந் திகதி வரை ஆண்டொன்றுக்குப் பத்தொன்பது சதவீத (19%) வட்டியும் அதன்பின்னர் ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் 1 ஆவது வேலை நாளன்று மூன்றுமாதங்களுக்கொருதடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ ஸ்பொட்) ஆண்டொன்றுக்கு ஏழு தசம் ஐந்து சதவீத (7.5%) வட்டியும் (ஆண்டொன்றுக்குப் பதின்மூன்று) தசம் ஐந்து சதவீத (13.5%) அடிமட்ட வீதத்துக்கமைய) சொல்லப்பட்ட கங்காணி ஆச்சி ஹக்கல்லகே திலக் நந்தன சுமணரத்ன மற்றும் நடீஜா நேத்ராஞ்சலி ஜயசிங்க என்போரிடமிருந்து மேற்கூறப்பட்ட 1295 ஆம், 1570 ஆம் இலக்க ஈட்டுமுறிகள்மீது டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்.

டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அவர்களுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லாப்பட்ட 1295 ஆம் 1570 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீயினால் உறப்பட்ட எழுபத்து ஒன்பது இலட்சத்து ஐம்பத்திரெண்டாயிரத்து முந்நூற்றியைம்பத்தேழு ரூபா இருபத்தேழு சதம் (ரூ. 79,52,357.27) கொண்ட தொகையையும் 2018, ஏப்பிறல் 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் தேதிவரை நாற்பத்து ஒன்பது இலட்சத்து நாற்பத்தையாயிரத்து நானூற்றித் தொண்ணூற்றிநான்கு ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூ. 49,45,494.57) கொண்ட தொகைமீது 2018.07.02 ஆந் திகதிவரை ஆண்டொன்றுக்குப் பத்தொன்பது சதவீத (19%) வட்டியையும் அதன்பின்னர் ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் 1 ஆவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ ஸ்பொட்) ஆண்டொன்றுக்கு எட்டுச் சதவீத (8%) வட்டியையும் அத்துடன் இருபத்தொரு இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து எழுநூற்றியெழுபத்தெட்டு ரூபா ஐம்பத்திரெண்டு சதம் (ரூ. 21,68,778.52) கொண்ட தொகைமீது 2019.02.25 ஆந் திகதிவரை ஆண்டொன்றுக்குப் பத்தொன்பது சதவீத (19%) வட்டியையும் அதன்பின்னர் ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் 1 ஆவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ ஸ்பொட்) ஆண்டொன்றுக்கு ஏழு தசம் ஐந்து சதவீத (7.5%) வட்டியையும் (ஆண்டொன்றுக்குப் பதின்மூன்று தசம் ஐந்து சதவீத (13.5%) அடிமட்ட வீதத்துக்கமைய) அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினையும் கீழே விபரிக்கப்படும் காணியையும் கட்டிடத்தையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள் விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவுதொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து அறவிடுவதற்காக மேற்கூறப்பட்ட ஈட்டுமுறிகள் மூலம் கங்காணி அச்சி ஹக்கல்லகே திலக் நந்தன சுமணரத்ன மற்றும் நதீஜா நேத்ராஞ்சலி ஜயசிங்க என்போரினால் டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. டலாஸ் கெலார்ட் அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.”

**1295 ஆம் 1570 ஆம் இலக்க ஈட்டுமுறிகள்மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் அளுத்குரு கோறளையின் ராகம் பத்துவில் வத்தளைப் பிரதேச செயலகப் பிரிவிலும் வத்தளை-மாபோலை நகரசபை எல்லைகளிலும் அவரியவத்த கிராம அலுவலர் பிரிவினுள் வத்தளையில் அமைந்துள்ளதும் அவரியவத்த வீதியில் 123/8 ஆம் 123/9 ஆம் வரிமதிப்பீட்டிலக்கங்களைக் கொண்டதும் கஹட்டகஹாவத்த

மற்றும் அம்பகஹாவத்த மறுபெயர் அம்பகஹாவத்த மறுபெயர் அளுபோகஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எச். ஏ. டீ. பிரேமரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2003.04.02 ஆந் திகதிய 3614 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் A2E எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப் பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங் கலும் சொல்லப்பட்ட காணித்துண்டம் ' A2E பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : காணித்துண்டங்கள் A2B மற்றும் A2D ; கிழக்கு : அவரிவத்த வீதியில் 127 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் ; தெற்கு : அல்விஸ் அவனியூ; மற்றும் மேற்கு: அல்விஸ் அவனியூ பரப்பளவில் இது அதன்மீதுள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் எல்லாவற்றுடனும் பத்து தசம் ஏழு பூச்சியம் பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 10.70பே.) கொண்டுள்ளது அத்துடன் கம்பஹா காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

சொல்லப்பட்ட காணித்துண்டம் A2E மீள்நில அளவை யிடப்பட்டு கீழே விவரிக்கப்பட்டுள்ளது:

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் அளுத்குருக் கோறளையின் ராகம் பத்துவில் வத்தளைப் பிரதேச செயலகப் பிரிவிலும் வத்தளை-மாபோலை நகரசபை எல்லைகளிலும் அவரியவத்த கிராம அலுவலர் பிரிவினுள் வத்தளையில் அமைந்துள்ளதும் அவரியவத்த வீதியில் 123/8 ஆம் 123/9 ஆம் வரிமதிப்பீட்டிலக்கங்களைக் கொண்டதும் கஹட்டகஹாவத்த மற்றும் அம்பகஹாவத்த மறுபெயர் அம்பகஹாவத்த மறுபெயர் அளுபோகஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எச். ஏ. எம். சீ. பண்டார என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2013.06.29 ஆந் திகதிய 5385 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 1 எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப் பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் சொல்லப்பட்ட காணித்துண்டம் ' 1 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எச். ஏ. டீ. பிரேமரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2003.04.02 ஆந் திகதிய 3641 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டங்கள் A2B மற்றும் A2D ; கிழக்கு: அவரிவத்த வீதியில் 127 ஆம் வரிமதிப்பீட்டிலக்கக் காணி; தெற்கு : அல்விஸ் அவனியூ ; மற்றும் மேற்கு : முன்னர் அல்விஸ் அவனியூ தற்போது 1 ஆவது கொன்வன்ட் வீதி பரப்பளவில் இது அதன்மீதுள்ள மரங்கள் பயிர்கள் மற்றும் எல்லாவற்றுடனும் பத்துத் தசம் ஏழு பூச்சியம் பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. பே10.70) கொண்டுள்ளது.

கீழே விவரிக்கப்பட்ட காணியின்மீதும் அதுநெடுகிலுமான செல்வழியுரிமையுடன் சேர்த்து.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் அளுத்குருக் கோறளையின் ராகம் பத்துவில் வத்தளைப் பிரதேச செயலகப் பிரிவிலும் வத்தளை-மாபோலை நகரசபை எல்லைகளிலும் அவரியவத்த கிராம அலுவலர் பிரிவினுள் வத்தளையில் அமைந்துள்ளதும் அவரியவத்த வீதியில் கஹட்டகஹாவத்த மற்றும் அம்பகஹாவத்த மறுபெயர் அம்பகஹாவத்த மறுபெயர் அளுபோகஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எச். ஏ. டீ. பிரேமரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2003.04.02 ஆந் திகதிய 3614 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் A2D எனவடையாளமிடப்பட்டதும் (12 அடி அகலமான வீதிக்கான ஒதுக்கிடம்) பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் சொல்லப்பட்ட காணித்துண்டம் A2D பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : காணித்துண்டம் A2C ; கிழக்கு: காணித்துண்டம் A2B ; தெற்கு : காணித்துண்டம் A2E மற்றும் ; மேற்கு : அல்விஸ் அவனியூ பரப்பளவில் இது அதன்மீதுள்ள மரங்கள் பயிர்கள் மற்றும் எல்லாவற்றுடனும் இரண்டு தசம் ஏழு ஐந்து பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 2.75பே.) கொண்டுள்ளதுடன் கம்பஹா காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

லக்ஷ்மன் சில்வா,
பிரதான நிறைவேற்றலுவலர்.

டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

10-385

---

**சம்பத் வங்கி பீ. எல். சீ.**

( முன்பு சம்பத் வங்கி லிமிட்டட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

சென் ஜுட் இம்ப்போர்ட்டார்ஸ் அன்ட் எக்ஸ்போர்ட்டார்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கணக்கு இல.: 0088 1000 1446

2018, ஒகத்து மாதம் 30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:-

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு-2, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்து சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக கம்பஹா பிரசித்த நொத்தாரிசுகளான என். எம். நாகொடவித்தான என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017, சனவரி 26 ஆந் திகதியிடப்பட்ட இல. 3419 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனை கள் மீது பெற்றுக் கொண்ட கடனை, கடமைப்பட்டார் என்ற வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கம்பனி சட்டவாகத்திற்கமைவாக நேர்த்தியாக கூட்டிணைக்கப்பட்ட பதிவு இல. பீவீ 12129 ஐக் கொண்ட "சென் ஜுட் இம்ப்போர்ட்டார்ஸ் அன்ட் எக்ஸ்போர்ட்டார்ஸ்

(பிறைவேட்) லிமிட்டெட்" மீது பெற்றுக்கொண்ட கடனை இலங்கையின் கடன்பட்டவர் எனும் வகையில் தேஹேகிரிகே கிராஷியஸ் திலான் இயேந்ர சில்வா என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இல. 3419 எனும் ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் ஒன்பது கோடியே பதின் ஏழு இலட்சத்து ஐம்பத்தி மூவாராயிரத்து எழுநூற்று எழுபத்தி ஐந்து ரூபா முப்பத்தி நான்கு சதம் (ரூபா 9,17,53,775.34) 2018, யூலை 2 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன் குறிப்பிட்ட ஒன்பது கோடியே பதினேழு இலட்சத்து ஐம்பத்தி மூவாயிரத்து எழு நூற்று எழுபத்தி ஐந்து ரூபா முப்பத்தி நான்கு சதம் (ரூபா 9,17,53,775.34) 2018, யூலை 08 ஆந் திகதி முதல் இல. 3419 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை எட்டு கோடியே ஐம்பத்தி ஆறு இலட்சம் ரூபா (ரூபா 85,600,000) கட்டணத்திற்காக at the rate of Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு நான்கு தசம் ஐந்து வீதம் (4.5%) (Floor rate of 16.5% per annum) எனும் கட்டணத்திற்கு வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 3419 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.".

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளே ராகம் பத்துவின் ஜா-எல பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லைகளுக்குள் ஜயசமறுகம கிராம அலுவலர் பிரிவின் நாகொடையில் அமைந்த கொழும்பு வீதி, வரிமதிப்பீட்டு இல. 173-ஏ. ஐ ஏற்ற "நாகாஹாவத்த" என்றழைக்கப்படும்காணிக்குஉத்தரவுபெற்றநிலஅளவையாளர் கே. ஆர். எஸ். பொன்சேக்கா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2017, சனவரி 23 ஆந் திகதியிடப்பட்ட இல. 7496 எனும் வரைபடத்தில் காட்டப் பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 $^{A1}$ எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: முன்னர் கிரிகோரிஸ் பெர்ணாண்டோவிற்கு சொந்தமான தற்போது ஈ ஏ சீ சில்வாவின் காணி; கிழக்கு : பி. எஸ். பி. பெர்ணாண்டோ மற்றும் ஏனையோரிற்கு சொந்தமான காணியை பிரிக்கும் கால்வாய் ; தெற்கு : பி. எஸ். பி. பெர்ணாண்டோ மற்றும் ஏனையோரிற்கு சொந்தமான காணியை பிரிக்கும் கால்வாய் மற்றும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். டீ. எஸ். வீ. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 15432 எனும் வரைபடத்தின் லொட் 2; மற்றும் மேற்கு : பிரதான வீதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு றூட்கள் (0ஏ. 2றூ. 0பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதற்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 7496 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் 1 $^{A1}$ கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

